கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை

மாதம் இருமுறை

18-3-1973

30 காசு





ஆண்,
ஆளப்பிறந்தவன்.
அவன் துணைவி,
அவனது இதயராணி.
பிள்ளைக் கனியமுது,
பேசும் பொற் சித்திரம்.

இல்லறத்தின்
சுவைக்களனில்
மலர்ந்தவை,
மபத்லால்
துணிமணிகள்!

மெஃப்ரின் எஸ்டர்காட் டெரோஸெல்


எளிய சாயல்களிலும்,
எடுப்பான வண்ணங்களிலும்,
பெருமித பிரிண்டுகளிலும்
'மெஃப்ரின்' 100% பாலியெஸ்டர்
சேலைகள், பாலியெஸ்டர்
இழைகலந்த காட்டன் சேலைகள்;
'மெஃப்ரின்' பாலியெஸ்டர்
இழைகலந்த உடுப்புத்
துணிகள் — இலேசான லான்கள்,
கோடை நிழல் படரும்
கேம்ப்ரிக்குகள், கோலாகல
நகை மிளிரும் பாப்லின்கள்;
இன்னெழில் மிளிரும்
வண்ணங்களிலே, வரிகளிலே,
கட்டங்களிலே 'எஸ்டர்காட்'
பாலியெஸ்டர் இழைகலந்த
காட்டன் சூட்டிங்குகள்; அதி
நவீனமான அரும்பெரும் அழகு
வண்ணங்களில், பிரிண்டுகளில்
'டெரோஸெல்' பாலியெஸ்டர்
இழைகலந்த காட்டன்
ஷர்ட்டிங்குகள்.

**மபத்லால்
க்ரூப்**

AIYARS-M, 174 TM




SISTA'S/INC/959 TAM



சந்தா விவரம் :
தனிப் பிரதி
விலை 30 காசு

ந வருடம்	ரூ.	7-00
று மாதம்	ரூ.	3-50
பனி நாடுகள்	ரூ.	18-00



கோகுலம்

மலர் 1 :: இதழ் 24
மார்ச் 18, 1973
பரிதாபி, பங்குனி 5

உயிர்களிடத்து அன்பு வேண்டும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேண்டும் — பாரதியார்



அட்டைப்படக் குழந்தையிடம் :
"கண்ணே! உன் கண்ணும்
கன்னமும் சிரிக்குது பெண்ணே!"

வண்ணப்படம் :



சாமியார் தோற்றார்

ராஜாஜி

"புலிகாள்! சிறுத்தைகாள்! நீங்கள் ஏன் இந்தப் பாவ ஜீவனம் நடத்துகிறீர்கள்? பசுக்களையும், மான்களையும் கொன்று தின்கிறீர்களே, இது மகாபாபம் என்பது உங்களுக்குத் தெரியாதா? இந்த வழக்கத்தை விட்டு விடுங்கள். என்னைப் போல் நீங்களும் வாழுங்கள்!" என்றார் சாமியார்.

" இந்தச் சாமியாரின் தொந்தரவு அதிகமாய்ப் போயிற்று. இவரை நீங்கள் தின்றுவிடலாம் என்பது என் யோசனை" என்றது நரி.

"இவரை விழுங்கினால் இவருடைய தாடியும் தலை ஜடையும் என் வயிற்றில் சிக்கிச் சுழன்று எனக்கு என்ன ஆகுமோ, சொல்ல முடியாது. உன் யோசனையில் பயன் இல்லை. இவரோடு கொஞ்சம் பேசி விஷயத்தைத் தீர்த்துக் கொள்ளலாம்" என்று புலி, நரியைச் சமாதானப் படுத்திற்று.

''சாமியாரே! உங்கள் ஜனங்களும் ஆடு, கோழி தின்கிறார்களே? எங்களை மட்டும் ஏன் குறை கூறுகிறீர்கள்?'' என்று கேட்டது சிறுத்தை.

''அப்படிக் கேள்'' என்றது புலி.

''குழந்தைகளே ! நீங்கள் கேட்பது நியாயம். ஆனால் அவர்கள் ஆட்டையும் கோழியையும் சமைத்துச் சாப்பிடுகிறார்கள். பச்சையாக உங்களைப் போல் சாப்பிடுவதில்லை. நீங்கள் செய்வது அநாகரிகம்!'' என்றார் சாமியார்.

''இது சரியான வாதமல்ல!'' என்றது புலி.

''ஏன்? சொல்!''-என்றார் சாமியார்.

''எடுத்துச் சொல், நரி! உனக்குத் தான் பேசத் தெரியும்'' என்று புலி தன்னுடைய மந்திரி நரியை வாதம் செய்ய உத்தரவிட்டது.

''சாமியாரே! இந்தச் சின்ன விஷயம் உமக்குத் தெரியவில்லையே! ஆச்சரியமாக இருக்கிறது. நீர் எல்லாம் படித்திருக்கிறீர். நான் ஒரு சாஸ்திரமும் படிக்கவில்லை. பச்சையாக ஆடு மாடுகளைத் தின்று ஜீரணம் செய்துகொள்ளும் சக்தி ஆண்டவன் புலிக்கும் சிறுத்தைக்கும் கொடுத்திருக்கிறான். மனிதனுக்கு அந்தச் சக்தியைக் கொடுக்கவில்லை. ஒப்புக்கொள்கிறீரா?'' என்று கேட்டது நரி.

''நீ சொன்னது உண்மை! அதனால் தான் நன்றாகச் சமைத்துச் சாப்பிடுகிறார்கள்'' என்றார் சாமியார்.

''ஆண்டவன் செய்து வைத்திருக்கும் அமைப்பில் சாப்பிடக் கூடாத உணவை மனிதர்கள் சமைத்துச் சரிப்படுத்திச் சாப்பிடுகிறார்களே, அதுதான் பாவம். ஆண்டவன் உத்தரவுக்கு விரோதம். ஜீரணம் செய்துகொள்ளும் சக்தி இருக்கிற புலியும் சிறுத்தையும் மிருகங்களைச் சாப்பிடுவதில் பாபமில்லை. இயற்கைக்கு விரோதமாக நெருப்பையும் தண்ணீரையும் உபயோகித்து, மாமிசத்தை மிருதுவாக்கித் தின்பதுதான் பாபம்'' என்றது நரி.

''செத்த மாமிசத்தைத் தின்னும் நீ சாதுரியமாகப் பேசுகிறாய். உன் ஜீவனம் மிகக் கேவலம்'' என்றார் சாமியார்.

''உங்களை வணங்குகிறேன். உயிருடன் இருக்கும் ஆட்டை வெட்டி உங்கள் இனத்தார் தின்கிறார்கள்.. பிராணி செத்த பிறகு அழுகிப் போகும் பிரேதத்தை நான் தின்பதா, பாவம்?'' என்றது நரி.

சாமியார் தலையைச் சொறிந்து கொண்டு யோசனை செய்தார்.





''போய் வருகிறீர்களா? இங்கே இன்னும் நீங்கள் தங்குவது அபாயம். இந்தச் சிறுத்தைக்குப் பசி மேலிட்டு வருகிறது'' என்றது புலி.

சிறுத்தை வாயினின்றும் எச்சில் ஊறிக்கொண்டிருந்தது. அதைக் கண்டு புலி இவ்வாறு எச்சரித்தது.

சாமியார் அங்கிருந்து வேகமாகவே போய்விட்டார்!

கண்ணன் கனியமுதம்

நந்தகோபனை ஒரு மலைப்பாம்பு சுற்றிக்கொண்டு விழுங்கவே, அவன் ''ஓ!'' என்று கூவி அலறினான். யதுகுல ஜனங்கள் கத்தியும் கோடரியும் கொணர்ந்து மலைப்பாம்பைத் தாக்கினார்கள். அதனால் வேதனைப்படாத மலைப் பாம்பு நந்தகோபனை வேகமாக விழுங்கலாயிற்று.


நந்தகோபன், ''கிருஷ்ணா! கிருஷ்ணா!'' என்று கதறினான். அதைக் கேட்ட பகவான் ஓடி வந்து தமது திருவடியால் மலைப் பாம்பை உதைத்துத் தள்ளினார். அவர் திருவடி பட்டதும் மலைப் பாம்பு வடிவம் நீங்கி ஓரழகிய வித்யாதரன் தோன்றி யதுகுல நாதனைத் தொழுது நின்றான். தாமோதரர் அவனைப் பார்த்து, ''நீ யார்? ஏன் இப்படி மலைப் பாம்பாக இருந்தாய்? உன் வரலாறு யாது?'' என்று வினவினார்.

வித்யாதரன், ''ஐயனே! அருட்பெருங்கொண்டலே! அடியேன் சுதர்சனன் என்ற வித்யாதரன். அளவற்ற அழகுடைய நான் அகங்காரமடைந்து அழகற்றுக் காட்சியளித்த அங்கிரசர்களைக் கண்டு ஏளனஞ் செய்தேன். அவர்கள் என்னை மலைப் பாம்பாகுமாறு சபித்தார்கள். நான் மன்னிக்குமாறு வேண்டினேன். அவர்கள் திருவுளம் இரங்கி, 'பரம பிதாவாகிய பரந்தாமன் பாதம் பட்டால் சாபம் விலகும் என்று அருள் புரிந்தார்கள். தெய்வமே! உன் திருவடியால் பாபம், சாபம் இரண்டுமே நீங்கப் பெற்றேன்'' என்று கூறி இறைவனை இறைஞ்சி விடை பெற்றுச் சென்றான்.

கண்ணபிரான் எல்லோரையும் அழைத்துக் கொண்டு பிருந்தாவனம் சேர்ந்தார்.

ஒரு நாள் பௌர்ணமி; எங்கும் நிலவொளி வீசியது. அழகிய அந்நள்ளிரவில் கண்ணன் வேணுகானத்தால் சராசரங்களை மகிழச் செய்தார்.

அப்போது குபேரனுடைய தோழனாகிய சங்கசூடன் மாய வடிவம் கொண்டு கோபிகைப் பெண்களையெல்லாம்



கவர்ந்து ஓடினான். பகவான் பலராமருடன் ஒரு வானளாவிய மரத்தை வேருடன் பிடுங்கி அவன் சென்ற இடங்கள்தோறும் தொடர்ந்து சென்று அவனை அடித்துக் கொன்றார். தலை பிளந்து அவன் மாய்ந்தான். அவன் தலையிலிருந்து ஓர் இரத்தினமணி



சூரியப்பிரகாசமாகச் சிதறியது. அந்த மாமணியை எம்பெருமான் எடுத்துப் பலராமருக்குக் காணிக்கை தந்தார்.

அரிஷ்டாசுர வதம்

ஆயர்பாடியில்கோபாலர்கள் கண்ணபிரானுடைய கருணை வெள்ளத்தில் மூழ்கி நிரம்பிய சுகத்துடன் வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

ஒரு நாள் அரிஷ்டகன் என்ற ஒரு கொடிய அரக்கன் அங்கு வந்தான். அவன் மாயையில் மிகவும் வல்லவன். அந்தகனும் அஞ்சத்தக்க ஆற்றல் படைத்தவன். அவன் கோபால ஜனங்களையும் கண்ணனையும் ஒருங்கே மாய்த்து விட வேண்டும் என்று எண்ணினான்.

யுகாந்த காலத்துக் கரிய மேகம் எழுவது போல் சீற்றத்துடன் எழுந்தான். மலை போன்ற எருது வடிவம் கொண்டான். கொம்புகள் மலையின் கொடுமுடி போலவும், கால் குளம்புகள் வச்சிராயுதம் போலவும் இருந்தன. அதன் கண்களில் நெருப்புப் பொறிகள் பறந்தன. மூக்கில் புகை 'குபுகுபு' என்று கிளம்பியது. அந்த அசுர எருது கால் வைப்பதனால் பூதலம் நடுங்கியது. விண்ணுலகம் அசைந்தது. மலைகள் ஆடி அதிர்ந்தன. கால்களைப் பெயர்த்து வைக்கும்போது இடி முழக்கம் போல் பேரொலி உண்டாயிற்று. உலகம் அதிர அந்த எருது ஆயர்பாடியில் நுழைந்தது. அதன் பேரிரைச்சலைக் கண்டு கன்றுகள் அஞ்சித் தாய்ப் பசுவிடம் ஓடின; பசுக்கள் அஞ்சி எருதுகளிடம் ஓடின; எருதுகள் அஞ்சித் தம்மைக் காக்கும் கோபிகைகளிடம் ஓடின. கோபிகைகள் நிலை குலைந்து கோபாலர்களிடம் ஓடினார்கள். கோபாலஜனங்கள் கோவிந்தரிடம் ஓடி, ''ஐயனே! சங்காழிக் கையனே! எல்லாம் அறிந்தவனே! உலக நாதனே! எம்மைக் காப்பது நின் கடன்'' என்று கூறித் தஞ்சம் அடைந்தார்கள்.

எம்பெருமான் அவர்களுக்கு அபயம் தந்தார். நீங்கள் அஞ்சாதீர்கள். நல்லோரை நாசஞ் செய்ய வந்த இந்த அசுர எருதை நாம் வதைத்து அருள் புரிவோம்'' என்று கூறினார். மலை போல் வருகின்ற எருதின் முன்னால் அஞ்சாது சென்றார். ''ஏ, இரக்கமற்ற அரக்கனே! இது கண்ணனாகிய அரச சிங்கம் உலவுகின்ற இடம் என்று நீ அறிந்தாயில்லை. உனக்கு அழிவுக் காலம் நெருங்கிவிட்டது. நெருப்பில் விழும் விட்டில் பூச்சியைப் போல் இங்கு வந்தாய்'' என்று வீர வசனங்களைக் கூறினார். அதனுடைய வச்ராயுதத்தைப் போன்ற கொம்புகளைப் பிடித்தார். அந்த அசுர எருது பின்னங் காலால் பூமியை மிதித்து மணல்களை வாரி இறைத்தது. கண்ணபிரானைக் கால்களால் உதைத்தது. புருஷோத்தமன் புன்னகை புரிந்து, கெட்டியாக அதன் கொம்புகளைப் பிடித்து அசைத்துப் பிடுங்கினார். அவைகளை இரு கரங்களில் ஏந்தி மலை போன்ற எருதின் உடம்பில் குத்தி அதனை மாய்த்தார். மேகம் வீழ்வதுபோல் 'ஓ' என்று கதறி அரிஷ்டாசுரன் மாய்ந்தான். எல்லோரும் இடர் நீங்கி இன்புற்றார்கள். **(தொடரும்)**

நல்ல தம்பி

ஞான. வைத்தியநாதன்

பன்னிரண்டு வயதுக்குள் நல்ல தம்பிக்குத்தான் எவ்வளவு துன்பம் ! அவனுக்கென்று யாருமே இல்லை. அவனுடைய பெற்றோர் காய்ச்சலில் இறந்து போய்க் கனவுபோல் மூன்றாண்டுகள் ஓடி விட்டன. அப்போது அநாதையாக, பிறந்த ஊரை விட்டுக் கிளம்பியவன், எங்கெங்கோ ஆறு மாதங்கள் அலைந்து திரிந்துவிட்டுக் குறிஞ்சிப்பாடிக்கு வந்து சேர்ந்தான்.

கடைசியில் பஸ் நிலையத்தில் மூட்டை தூக்கி வயிற்றுப்பாட்டைக் கவனிக்க ஆரம்பித்தான் நல்லதம்பி. அப்போது முதல் அந்த வேலையில் அவன் நிலைத்தும் விட்டான்.

இரண்டு நாட்களாக நல்ல மழை. அதனால் அவனுக்குக் கூலி வேலை ஒன்றும் கிடைக்கவில்லை. காலையிலிருந்து மழை விட்டிருந்தது.

பசி வேதனையுடன் நல்ல தம்பி பஸ் நிலையத்தை நோட்டம் விட்டான்.

அப்போது, ''டேய், பசி உயிரே போகுதடா'' என்று கூறிக் கொண்டே அவன் அருகே நகர்ந்து வந்து உட்கார்ந்தான் சின்னப்பன்.

சின்னப்பனும் நல்லதம்பியைப் போலத்தான். அதனால் இருவரும் நண்பர்கள். ஆனால் சின்னப்பன் முழுச் சோம்பேறி. பெரும்பாலும் நல்லதம்பியின் உழைப்பால் கிடைக்கும் வருமானத்தில் தானும் பசியாறிவிடுவான் சின்னப்பன்.

'' அதுக்கு என்னடா, செய்யறது ? கூலி கெடைச்சு தின்னுப் பசியைப் போக்கிக்கலாம் !'' என்று சின்னப்பனுக்குப் பதில் சொன்னான் நல்லதம்பி.

இருவரும் அப்படிப் பேசிக் கொண்டிருக்கும் பொழுது கடலூரிலிருந்து விருத்தாசலம் செல்லும் பஸ் வந்து நின்றது.

நல்லதம்பி சின்னப்பனைப் பார்த்தான். சின்னப்பனின் பசித் துடிப்பை நல்லதம்பியால் பொறுக்க முடியவில்லை.

உடனே ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவனாக நல்லதம்பி, தன் பசி வேதனையையும் மறந்து விருட்டென்று எழுந்தான். மற்றவர்கள் முந்திக் கொள்வதற்குமுன் தான் முந்திக் கொள்ள வேண்டுமே? அந்தப் பஸ்ஸை நோக்கி ஓடினான்.

பஸ்ஸிலிருந்து இறங்குபவர்களையே பார்த்துக் கொண்டு நின்றான் நல்ல தம்பி. 'ஏதாவது கூலி வேலை கிடைக்காதா?' — மனத்தில் சிந்தனை வட்டம் சுழல, அவன் கண்கள் தீவிரமாக இறங்குபவர்களைத் துழாவின. கடைசியாக முதியவர் ஒருவர் இரண்டு பெட்டிகளுடன் இறங்கினார்.

''சார்! பெட்டிகளை நான் தூக்கி வரேன் சார் !'' — நல்லதம்பி அவரிடம் கேட்டான்.

முதியவர் அவனை ஏற இறங்கப் பார்த்தார். பின், ''நீ தூக்கி வருவாயா? பார்த்தால் உன்னாலே முடியாது போலத் தெரியுதே ?'' என்றார் அவர்.

''என்னால் தூக்கி வர முடியும் சார். இப்படிக் கொடுங்க'' என்று அவசரமாகச் சொல்லிவிட்டு, நல்லதம்பி அவரிடமிருந்து பெட்டிகளை வாங்க முயன்றான்.

'' இரு, தம்பி, காந்தி சிலைக்குப் போகணும். எவ்வளவு கேட்கிறே ?''— கூலி பேசிக் கொள்ள முனைந்தார் பெரியவர்.

''ஐம்பது காசு கொடுங்க, போதும். உழைப்புக்கு ஏற்ற கூலிதான் நான் கேட்பேன் !'' என்று நல்லதம்பி பதில் சொன்னான்.

முதியவர் வியப்போடு அவனைப் பார்த்தார். அவருக்கு அவன் பதில் மிகவும் பிடித்துப் போய்விட்டது என்பதை அவர் காட்டிய வியப்பு கூறியது.

''சரி, தூக்கிக்கோ !''

முதியவர் முன்னே நடந்தார். நல்லதம்பி பெட்டிகளைத் தூக்கிக் கொண்டு அவர் பின்னே நடந்தான். பாதி தூரம் தான் நடந்திருப்பான் நல்லதம்பி. அவனால் அதற்கு மேல் பாரத்தைச் சுமக்க முடியவில்லை. இருந்தாலும் சின்னப்பனின் பசியையும் போக்க வேண்டும் என்ற இரக்கத்தால் அவன் சுமந்து சென்றான்.

அப்போது யதேச்சையாகப் பின்னால் திரும்பிப் பார்த்த முதியவர் நல்லதம்பி படும் சிரமத்தைக் கண்டார். அவருக்கு மனம் தாளவில்லை. ''தம்பி! ஒரு பெட்டியைக் கொடு. நான் எடுத்து வருகிறேன். நீ ஒரு பெட்டியை மட்டும் எடுத்து வா !'' என்றார்.

''வேண்டாம், சார் !'' — நல்லதம்பி மறுத்தான்.

ஆனால் முதியவர் கேட்கவில்லை. வலுக் கட்டாயமாக அவனிடமிருந்து ஒரு பெட்டியை வாங்கிக் கொண்டு நடந்தார்.

காந்தி சிலை வந்தது. நல்லதம்பி பெட்டியை இறக்கி, அவர் காட்டிய

கடையில் வைத்தான். முதியவர் அவனிடம் ஐம்பது காசு கொடுத்தார்.

''வேண்டாம், சார். முப்பத்தாறு காசு கொடுங்க போதும்!'' என்றான் நல்லதம்பி.

'' இல்லே, இதை வாங்கிக்கோ.'' முதியவர் அவனை வற்புறுத்தினர்.

நல்லதம்பி கடைசி வரை மறுத்துவிட்டு, முப்பத்தாறு காசு மட்டுமே பெற்றுக் கொண்டு நடந்தான்.

நேரே நல்லதம்பி பஸ் நிலையத்துக்கு வந்து சேர்ந்தான். இரண்டு புரையும் இரண்டு டீயும் வாங்கிக் கொண்டான். சின்னப்பனிடம் வந்து ஒரு புரையை



யும் டீயையும் கொடுத்து விட்டு, தானும் பசியாறத் தொடங்கினன்.

அவர்கள் பசியாறிக் கொண்டிருக்கையில், தம் வேலை முடிந்துவிட்டதால் சடுதியில் திரும்பி பஸ் நிலையத்துக்கு வந்து சேர்ந்தார் அந்த முதியவர். அவர் கண்ணிலே நல்லதம்பியின் பகிர்ந்துண்ணும் செயல் பட்டது.

அவர் வியப்புற்று நின்றார். எத்தனை நேரம் நின்றாரோ அவருக்கே தெரியாது. கடலூர் செல்லும் பஸ் வந்து நின்றதும் அதனை நோக்கி நடந்தார். அந்தப் பஸ்ஸுக்குக் கூட்டம் அதிகமாக இருந்தது. அவரும் பஸ்ஸில் ஏற முண்டியடித்துக் கொண்டு நின்றார்.

சின்னப்பன் கண்கள் திடீரென்று விரிந்தன. அவன் சிந்தனை வேகமாக ஓடிற்று. ஆம், முதியவர் பஸ் ஏறும் பொழுது அவர் பையிலிருந்து வெளி வந்து நின்ற பர்ஸைச் சின்னப்பன் பார்த்ததுதான் அதற்குக் காரணம்.

உடனே காலி கிளாஸை நல்லதம்பியிடம் தந்துவிட்டு, விருட்டென்று எழுந்து அவர் அருகில் சென்று நின்றான் சின்னப்பன்.

மறுகணத்தில் நல்லதம்பி கோபாவேசம் கொண்டான். விரைந்து சென்று சின்னப்பனைப் பிடித்து அடிக்கத் தொடங்கினன். அந்த முதியவர்? நல்லதம்பியின் செயலைக் கண்டு அதிர்ச்சியுற்றார். விரைந்து வந்து இருவரையும் விலக்கினார். பின்பு, ''தம்பி! நீ நல்லவன் என்று நினைத்தால் கெட்டவனக இருக்கிறயே? சற்று முன் இவனுக்கு டீயும் பொறையும் சாப்பிடக் கொடுத்தவன், இப்போது இப்படிப் போட்டு அடிக்கிறயே?'' என்று சற்றுக் கோபமாகவே நல்லதம்பியைப் பார்த்துக் கேட்டார் முதியவர்.

நல்லதம்பி அவரைப் பார்த்து மிகுந்த பணிவுடன், ''சார்! இவன் பெரிய தப்பு பண்ணிட்டான். முதல்லே நீங்க இவனை மன்னிச்சுடுங்க உங்க பர்ஸைத் திருடிட்டான் சார் இவன்!'' என்றவன், சின்னப்பனின் கால் சட்டைப் பைக்குள் தஞ்சம் அடைந்திருந்த பர்ஸை எடுத்து அவரிடம் நீட்டினன்.

முதியவர் பர்ஸை வாங்கிக் கொண்டார். ''தம்பி! நீ சொல்றதுக்காக இவனை மன்னிக்கிறேன். உனக்குத்தான் எத்தனை பெரிய மனம்; குணம்! தம்பி, இந்தா. இது என் அன்புப் பரிசு!'' என்று சொல்லிவிட்டு, பத்து ரூபாயை எடுத்து நல்லதம்பியிடம் நீட்டினர்.

நல்லதம்பி, ''சார்! எனக்கு இது வேணும் சார். நான் பள்ளிக்கூடத்திலே படிக்கும்போது எங்க ஆசிரியர் காந்தி சொன்னதா ஒண்ணு சொன்னர். 'உழைக்காமல் நான் அடுத்த வேளை உணவில் ஒரு பருக்கைகூடத் தொட மாட்டேன்' என்றராம் காந்திமகாத்மா. சார், இதுதான் என் வேதம். அதனலே நீங்க போய் வாங்க. உங்களுக்கு நன்றி!'' என்று சொன்னவன், சின்னப்பனின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு நடந்தான்.

முதியவர் சிலையாகி நின்றார்!

'ஏழை இந்தியா இதைத் தாங்காது'



ஒரு சமயம் காந்திஜி தமது பேரனன காந்திலாலிடம் 'இப்பொழுது மணி என்ன?' என்று கேட்டார். அப்பொழுது மணி ஐந்தாவதற்கு ஒரு நிமிடம் இருந்தது. ஆனல் காந்திலால் 'ஐந்து மணி' என்று சொன்னன். காந்திஜி கடிகாரத்தில் லேசாகக் கண்ணேட்டமிட்டவராக ஐந்தாவதற்கு ஒரு நிமிடம் இருப்பதைக் கண்டார்.

உடனே, 'காலத்தைச் சரியாகச் சொல்லத் தெரியாதவர்கள் கையில் கடிகாரம் கட்டியிருப்பதே வீண்; நம் நாட்டிலுள்ள 30 கோடி ஜனங்களும் (அப்போதைய மக்கள் தொகை) தலைக்கு ஒரு நிமிடம் வீதம் வீணக்கினல் அதனுடைய மொத்த கால அளவின் விரயம் மிக மிகப் பயங்கரமானதாக இருக்கும். ஒரு நிமிடம் கூட மதிப்பு மிக்கதாகும்; ஏழை நாடான இந்தியாவால் இதைத் தாங்க முடியாது' என்றர். —ந. சுப்பிரமணியன்

"சிறுவனும் தேர்வும்"

நெல்லை ஆ. கணபதி



சிறுவன்

ஏனோ தேர்வே வருகின்றாய்?
எனக்கே தொல்லை தருகின்றாய்!
நானோ உன்னால் துடிக்கின்றேன்!
நாளும் விழித்தே படிக்கின்றேன்!

எனக்கோ இங்கிலீஷ் தெரியாது!
இன்பத் தமிழும் ஏறாது
கணக்கோ சயின்ஸோ சரித்திரமோ
கரைத்துக் குடித்தும் செரிக்காது!

எனவே தேர்வே உன்வரவை
எண்ணி மிகவும் அஞ்சுகிறேன்!
பணிவு கொண்டே இக்கவிதை
பாடி உன்னைக் கெஞ்சுகிறேன்.

என்னைப் போன்றே துடிக்கின்ற
இளைஞர் எல்லாம் மகிழ்வடைய
உன்னை ஒன்று நான் கேட்பேன்;
ஒருநாளும்நீ வரவேண்டாம்!

தேர்வு

தம்பி! தம்பி! சிறுதம்பி!
தயக்கம் வேண்டாம் பொறு தம்பி!
நம்பிக்கைதான் வெற்றியினை
நல்கும்! வெல்வாய்! படி தம்பி!

தேர்வு வந்தால் பயம்கொண்டே
சிலபேர் தோல்வி அடைகின்றார்!
ஆர்வம் கொண்டால் நீ வெற்றி
அடைவாய்! என்றும் பயம்
வேண்டாட



பறவைகளே! பறவைகளே!

"கலையன்பன்"


வெள்ளைக்கொக்கே! வெள்ளைக்கொக்கே!
வெள்ளம் வருகுது — அதில்
துள்ளும் மீனைக் கொத்தி நீயும்
தின்ன ஓடி வா!

கறுப்புக் காக்கை கறுப்புக் காக்கை
கரைந்து பறந்துவா! — வந்து
பருப்புச் சோறு படையல் தன்னைப்
பகிர்ந்து உண்ண வா!

நீல மயிலே நீல மயிலே
நடனம் ஆட வா — தினம்
கோல முகிலை மழை பொழியக்
கூட்டி ஓடி வா!

பச்சைக் கிளியே! பச்சைக் கிளியே!
பழம் தின்ன வா — தமிழைக்
கொச்சையின்றிப் பேசிப் பழக
அருகில் ஓடி வா!





கண்டு குண்டு சீமாத் தாத்தா

—சாமா—

"பாட்டீ! நீங்க செய்த ரவாகேசரி ரொம்ப ஜோர்" என்று கத்தியபடி கண்டுவும் குண்டுவும் ஓடினார்கள், இன்னும் கொஞ்சம் சாப்பிட. "டேய், நீங்க எல்லோரும் வயிறு புடைக்கச் சாப்பிட்டுங்க. உங்க 'தாத்தாவுக்குக் கேசரின்னா உயிராச்சே!" என்று தாத்தாவை நோக்கிக் கேசரியுடன் ஓடினாள் பாட்டி.

எங்கோ வெளியே போய்விட்டு வந்த சீமாத் தாத்தா, அப்போதுதான் படுக்கையில் உட்காரப் போனார். "கேசரியா? ஒரேயடியாக மணக்கிறதே! கொண்டா இப்படி" என்று பிடி பிடியாகச் சாப்பிட ஆரம்பித்தார். கண்டுவும் குண்டுவும் தாத்தா சாப்பிடுவதையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

இரண்டு மூன்று கவளங்கள்தான் சாப்பிட்டிருப்பார் தாத்தா. அவர் நிலை தடுமாறுவதை எல்லோரும் பார்த்தனர். "என்ன தாத்தா?" என்று கேட்பதற்குள் தாத்தா அப்படியே சாய்ந்தார். "ஐயோ! என்ன ஆபத்து? கேசரியில்தான் ஏதோ கெடுதல்" என்று பாட்டி தவிக்க இதற்குள் தாத்தா கட்டையாகி விட்டார்.

"ஓடுடா, போய் டாக்டரை அழைத்து வாருங்கள்!" என்றாள் பாட்டி. கண்டுவும் குண்டுவும் தங்கள் வீட்டு டாக்டர் கிடைக்காமல் வேறு ஒரு டாக்டரை அழைத்துக் கொண்டு ஓடோடியும் வந்தார்கள்.

டாக்டர் பரிசோதனைக்குப் பிறகு கேசரியில் விஷம் கலந்திருக்க வேண்டும் என்று முடிவு செய்தார். "மீதிக் கேசரி எங்கே? 'கிங் இன்ஸ்டிடியூட்டுக்கு அனுப்ப வேண்டும்" என்று பறந்தார் டாக்டர்.

டாக்டர் சென்ற இரண்டு மணி நேரம் கழித்துச் சீமாத் தாத்தாவின் குரல் கேட்டது. அவர் கேட்ட முதல் கேள்வி "கேசரி எங்கேடா?" என்பதுதான்.

"'கிங் இன்ஸ்டிடியூட்டுக்கு விஷப் பரிசோதனைக்காகப் புலித்தோல் டாக்டர் எடுத்துப் போயிருக்கிறார்" என்றனர் 'க'-'கு'.

"யாருக்கு என்னடா?"

"என்னவாவது? நீங்கள் கேசரி சாப்பிட்டு மயங்கிக் கீழே விழுந்துட்டேளே. இப்ப எப்படி இருக்கு?" என்றாள் பாட்டி.

தாத்தா ஓவென்று சிரித்தார். "ஏக அலுப்பு. மூணு நாளா ராத்திரியில் தூக்கம் வரவில்லை. ஆகவே, நன்னாத் தூங்கினால் தேவலை என்று டாக்டரிடம் தூக்க மருந்து வாங்கிச் சாப்பிட்டுப் படுக்கப் போனேன். அப்போ நீ கேசரியும் கொண்டு வந்தே. அதைச் சாப்பிடுவதற்குள் தூக்கம் என்னை மயக்கி விட்டது" என்றார் தாத்தா.

எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டிருக்கும்போது தாத்தா கேட்டார்: "புலித்தோல் டாக்டரையா கூட்டி வந்தாய்? அவரைப் பற்றி உங்களுக்கு ஒரு ரசமான சமாசாரம் சொல்கிறேன்.

"இந்த டாக்டர், பட்டம் பெற்றுப் பிராக்டீஸ் செய்ய ஆரம்பிக்குமுன் ஒரு பெரிய டாக்டரிடம் உதவியாளராக இருந்தார். வழக்கமாக இவர் அந்தக் குரு டாக்டருடன் கூடப் போவது வழக்கம். ஒரு நாள் ஒரு பேஷண்டைப் பார்க்கப் போனார்கள் இருவரும். பேஷண்ட் ஏதோ சாப்பிட்டிருக்கிறார் என்ற சந்தேகம் பெரிய டாக்டருக்கு. கட்டிலுக்கு அடியில் குனிந்து பார்த்தார். வாழைப்பழத் தோலி இருந்தது. 'சார்! நீங்க வாழைப் பழம் சாப்பிட்டிருக்கிறீர்கள், உண்மையா?' என்றார். எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள்.

"பல வருஷங்கள் கழித்து இப்ப நம்ம வீட்டுக்கு வந்த டாக்டர் தனியாகத் தொழில் தொடங்கிய பின் ஒரு பேஷண்டைப் பார்க்கப் போனார். நோயாளி வாயைக் கட்டவில்லை என்ற சந்தேகம். ஆகவே தம் குருவைப்போலவே கட்டிலுக்கு அடியில் குனிந்து பார்த்தார். அங்கே ஒரு புலித் தோல் கிடந்தது. 'சார்! நீங்க ஒரு புலியை அடித்துச் சாப்பிட்டிருக்கிறீர்கள்!' என்றாரே பார்க்கலாம்! அப்படிப்பட்ட புத்திசாலி டாக்டர்தாண்டா இவர்" என்று சீமாத் தாத்தா சொல்லவே, எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.



அன்பின் வெற்றி

அழகு பழனிச்சாமி

வெகு காலத்துக்கு முன்னால் மேற்குத் தொடர்ச்சி மலையை யொட்டி ஒரு சிறிய கிராமம் இருந்தது. அந்தக் கிராமத்தில் கந்தன் என்ற விவசாயி வாழ்ந்து வந்தான். அவனிடம் நான்கைந்து பசுமாடுகள் இருந்தன. அவற்றைத் தினந்தோறும் மலைக்கு மேய்ச்சலுக்குக்காக ஓட்டிச் செல்வான்.

அவனிடமிருந்த பசுக்களுக்குள்ளே 'நாகு' என்ற ஒரு பசுவும் இருந்தது. அந்தப் பசு மிகவும் அழகானது. கந்தனுக்கு அந்தப் பசுவின் மேல் கொள்ளைப் பிரியம்! அதை அவன் மிகவும் அன்புடன் நேசித்து வளர்த்து வந்தான். ''நாகு நாகு'' என்று கந்தன் செல்லமாக அழைத்தால், அது உற்சாகத்துடன் தலையை அசைத்துத் துள்ளும்! வாலை ஆட்டித் தன் மகிழ்ச்சியைக் காட்டும்!

நாகு அப்போது சினையாக இருந்தது. இன்னும் சில தினங்களில் அது ஓர் அழகிய கன்றை ஈன்றுவிடும். அந்த நாளை அவன் மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

வழக்கம்போல் கந்தன் ஆடுமாடுகளை மேய்ச்சலுக்காக மலைக்கு அழைத்துச் சென்றான். முதலில் மற்ற மாடுகளுடன் நாகுவையும் அழைத்துச் செல்வதா வேண்டாமா என்று யோசனை செய்து பார்த்தான். பின்னர் ஏதோ தெளிவு பெற்றவனாக நாகுவையும் மேய்ச்சலுக்கு மலைக்கு ஓட்டிச் சென்றான்.

கந்தனுக்கு அன்று ஏனோ உடம்பு மிகவும் சோர்வாக இருந்தது. ஒரு மரத்தடியில் படுத்தவன் அப்படியே தூங்கிப் போய்விட்டான்! விழித்துப் பார்த்தபோது பசுக்களைக் காணவில்லை. கந்தனுக்கு ஒரே அதிர்ச்சியாக இருந்தது. பசுக்களைத் தேடி அலைந்தான். நீண்டு பரந்த அந்த மலைப் பிரதேசத்தில் பசு மாடுகளைத் தேடிக் கண்டு பிடிப்பது மிகவும் சிரமமாக இருந்தது. வெகு நேரம் கழித்து ஒரு புதருக்கு மத்தியில் பசுமாடுகள் நின்று கொண்டிருப்பதைக் கண்டான். மகிழ்ச்சிப் பெருக்குடன் மாடுகளை இனம் கண்டான். கந்தனுக்கு ஒரே மகிழ்ச்சியாக இருந்தது. எல்லா மாடுகளும் இருந்தன. ஆனால் அவன் பிரியமாய் அன்போடும் ஆசையோடும் வளர்த்து வந்த பசு நாகுவை மட்டும் காணவில்லை. கந்தன் கவலை அடைந்தான்; துயரம் தாளாது கண்ணீர்விட்டான்.

நன்றாக இருட்டுகிற வரையில் மலைப் பிரதேசத்தில் தேடித் தேடி அலைந்து விட்டுக் கண்ணீர் சிந்தும் கண்களுடன் மாடுகளை ஓட்டிக் கொண்டு வீடு சேர்ந்தான். அன்று இரவு முழுதும் அவன் தூங்கவேயில்லை. 'நாகு... நாகு!' என்று அவன் வாய் முணுமுணுத்துக் கொண்டே இருந்தது.

நாகு எப்படிக் காணமல் போனது? அது என்ன ஆனது? என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டாமா?

மேற்குத் தொடர்ச்சி மலையின் பள்ளத்தாக்குப் பிரதேசத்தில் பல புலிக் குகைகள் இருந்தன. அந்தக் குகைகளில் பல புலிக்குடும்பங்கள்வசித்துவந்தன.

இரண்டு புலிகள் தங்கள் கோரப் பசியைத் தீர்த்துக் கொள்வதற்காகப் பள்ளத்தாக்கை விட்டு வெகுதூரம் சுற்றி அலைந்தன. அவை தற்செயலாக ஒரு காட்சியைக் கண்டன.



நாகு என்ற பசு ஒரு கன்றை ஈன்றெடுத்து அதை நாவால் நக்கிக் கொண்டிருந்தது. அதைச் சுற்றிலும் நாலைந்து மாடுகள் நின்று கொண்டிருந்தன.


இந்தக் காட்சியை முதலில் கண்ட பெண் புலிக்கு ஒரு புதுமையான ஆசை முளைத்தது. உடனே அது தன் கணவனான ஆண் புலியைப் பார்த்து, ''அதோ பார்த்தீர்களா, ஒரு பசு இப்போதுதான் கன்றை ஈன்று கொண்டிருக்கிறது. எனக்கு ரொம்பநாட்களாக ஓர் ஆசை, புதிதாகப் பிறந்த பசுங் கன்றைத் தின்று ருசி பார்க்க வேண்டும் என்று. அந்த ஆசை இன்றுதான் நிறைவேறப் போகிறது. எப்படியும் அந்தப் பச்சைப் பசுங் கன்றை நான் சாப்பிட்டே தீர வேண்டும்!'' என்று தன் ஆசையை எடுத்துக் கூறியது.

உடனே ஆண் புலி, ''உன்னுடைய ஆசை எதுவாயிருந்தாலும் அதை அப்படியே நிறைவேற்றுகிறேன். இதோ பார்!'' என்றவாறு பசுக் கூட்டத்தின் மேல் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தது. மாடுகள் எல்லாம் மிரட்சியடைந்து ஓடி விட்டன!

ஆண்புலி இளங் கன்றை மிகவும் பக்குவமாக வாயில் கவ்விக் கொண்டு குகையை நோக்கி விரைந்தது. பெண் புலி அதைத் தொடர்ந்தது. கன்றைப் பறிகொடுத்த நாகுவோ துடியாய்த் துடித்தது. உயிரைத் திருணமாக நினைத்து அந்தப் புலிகளைப் பின்தொடர்ந்தது. ஆனால் பெண் புலியோ நாகுவைத் தொடர்ந்து வர விடாமல் பாய்ந்து விரட்டிவிட்டு ஓடியது. பசுவோ செய்வதறியாமல் துயரம் நெஞ்சை அடைக்க ஒரு மரத்தடியில் படுத்துவிட்டது.

புலிகள் இரண்டும் குகைக்குப் போய்ச் சேர்ந்தன.

''பார்த்தாயா? இந்தப் பசுங் கன்றுக்கு ஒரு சேதாரமும் இல்



லாமல் கொண்டு வந்து விட்டேன்! உன் ஆசை தீர நீயே சாப்பிடு!'' என்றது ஆண் புலி.

உடனே பெண் புலி குகைக்குள்ளே கூர்ந்து பார்த்துவிட்டு, ''ஆ!'' என்று அலறியது. ''ஐயோ! நம்ம குட்டிகள் இரண்டையும் காணுமே!'' என்று பதறியது.

ஆண் புலி சீறியது. ''சரி சரி. முதலில் இந்தக் கன்றைத் தின்று ருசி பார்ப்போம். அப்புறம் குட்டிகளைத் தேடுவோம்!'' என்றது.

பெண் புலி வேதனைப்பட்டது. ''ஐயோ! காலையில் கூட என்னிடம் பால் குடிக்கவில்லை. பசியுடன் எங்கே போய் அலைகிறதோ! இப்போதே போய்த் தேட வேண்டும்!'' என்று கண்டிப்புடன் கூறியது. கன்றுக்குட்டியைக் குகையின் மூலையிலே விட்டு விட்டு இரண்டு புலிகளும் தம் குட்டிகளைத் தேடிக்கொண்டு வெளியே புறப்பட்டன.

புலிகள் இரண்டும் எங்கெங்கோ தேடி அலைந்து விட்டு ஒரு மரத்தடியை நோக்கி வந்தன. அங்கே அவை கண்ட காட்சி அவைகளை அப்படியே ஊமையாக நிற்க வைத்து விட்டது!

பசு மாடு ஒன்று மரத்தடியில் சோகமாக நின்று கொண்டிருந்தது. அதன் மடியிலே புலிக் குட்டிகள் இரண்டும் உற்சாகமாகப் பாலைக் குடித்துக் கொண்டிருந்தன. பசுவின் அன்பையும், பெருந்தன்மையான எண்ணத்தையும் கண்ட புலிகள் இரண்டும் பேச முடியாமல் சிலை போல் நின்று விட்டன!

சிறிது நேரம் சென்றது.

புலிக் குட்டிகள் இரண்டும் ஆனந்தமாகப் பசும் பாலைப் பருகிவிட்டு உற்சாகத் துள்ளலோடு தலை நிமிர்ந்தன. பசுவும் தன் பார்வையைப் புலிக் குட்டிகளிடமிருந்து திருப்பியது.

புலிகள் இரண்டும் ஓசைப்படாமல் பசுவை நோக்கி நடந்தன. பெற்றோரைக் கண்ட புலிக் குட்டிகள் இரண்டும் பாய்ந்தோடிப் போய் ஒட்டிக்கொண்டன.

பசு கண்ணீர் சிந்தியபடி நின்று கொண்டிருந்தது. பெண் புலி உணர்ச்சி தோய்ந்த குரலில், ''அக்கா! உன் அன்பையும், கருணை உள்ளத்தையும் அறியாமல் உன்னுடைய பச்சிளங் கன்றை இரக்கமின்றித் தூக்கிக் கொண்டு போய் உன்னை வேதனைக்குள்ளாக்கி விட்டோம். நீயோ பசியோடிருந்த எங்கள் குட்டிகளுக்குப் பாலமுது கொடுத்து அவர்களின் பசியைப் போக்கி யிருக்கிறாய்! உன் முன்னால் நாங்கள் தலை நிமிர்ந்து நிற்க முடியவில்லை. எங்களை மன்னித்துவிடு'' என்று சொல்லிப் பசுவைக் குகைக்கு அழைத்துச் சென்று, அதன் கன்றை அதனிடம் ஒப்படைத்தது.

''பசியோடிருந்த என் குட்டிகளுக்கு நீ பகை பாராட்டாமல் பால் கொடுத்துப் பசி தீர்த்ததை எங்களால் என்றைக்கும் மறக்க முடியாது. எங்கள் விருந்தாளியாக நீ இரண்டு நாட்கள் தங்கிப் போக வேண்டும்'' என்றும் வேண்டிக் கொண்டன புலித் தம்பதிகள். ஆனால் நாகு ''என் எஜமானர் என்னைக் காணாமல் எப்படித் தவிக்கிறாரோ, பாவம்! ஆகவே நான் இங்கு தங்குவதற்கில்லை. உடனே ஊர் திரும்ப வேண்டும்'' என்று கூறிப் புலிகளிடம் விடைபெற்றுக் கொண்டது.

கந்தனுக்கு அன்று இரவெல்லாம் தூக்கமே வரவில்லை. நாகுவைப் பிரிந்து அவனால் இருக்கவே முடியவில்லை. விடிந்ததும் மலையை நோக்கிப் புறப்பட்டு விட்டான். நாகுவும் அதன் பச்சிளங் கன்றுக்குட்டியும் எதிரே வந்துகொண்டிருந்தன. கந்தனுக்கு நடந்தது ஒன்றுமே தெரியாது.


கந்தன், ''நாகு, நாகு!'' என்றவாறு ஓடி வந்தான். அன்புடன் நாகுவையும் கன்றையும் கட்டித் தழுவிக்கொண்டான். பசுவும் கன்றும் மகிழ்ச்சிப் பெருக்குடன் துள்ளின!

ஷீலாவைக் காணோம்!

இதுவரை நடந்த கதை:

கங்காராம் பெரும் பணக்காரர். பம்பாய் வாசி. அவரது ஒரே அன்பு மகள் ஷீலா. ஊட்டியிலுள்ள கான்வென்டில் படிக்கிறாள். மாடசாமி ஊட்டிவாசி. அவனிடம் டைகர் என்று ஓர் அற்புத நாய் இருக்கிறது. ஒரு தடவை ஷீலாவை அது ஓர் அபாயத்திலிருந்து காப்பாற்றுகிறது. ஷீலா அதன்மீது உயிரையே வைக்கிறாள். தன் அப்பாவிடம் அந்த நாயைத் தனக்கு வாங்கித் தருமாறு கேட்கிறாள். மாடசாமி அதை விற்க விரும்பவில்லை. தகப்பனுடன் பம்பாய் சென்ற ஷீலா டைகரின் நினைவாகவே உடல்நல மிழக்கிறாள். டைகர் வந்தால் தான் அவள் பிழைப்பாள் என்பதை அறிந்த போது மாடசாமி தன் அருமை நாயை ஷீலாவுக்காக பம்பாய் அனுப்பி வைக்கிறான். இச் செய்தியைப் பத்திரிகைகளில் படித்த கயவர்கள் இருவர் ஷீலாவைக் கடத்திக் கொண்டு போய் அதன்மூலம் கங்காராமிடம் பெரும் பணம் பறிக்கத் திட்டமிடுகிறார்கள். ஷீலா கடத்தப்படுகிறாள். டைகரின் உதவியுடன் போலீஸ் அக்கயவர்களைத் தேட முற்படுகிறது. அக் கொடியவர்கள் டைகரையும் காரில் இழுத்துப் போட்டுக் கொண்டு விரைகிறார்கள். வழியில் டைகரை ஓடும் காரிலிருந்து உதைத்து வெளியே உருட்டித் தள்ளிக் கொல்ல நினைக்கிறார்கள். ஆனால் டைகர் தெய்வாதீனமாக அந்த ஆபத்திலிருந்து தப்பி விடுகிறது. அதுமட்டுமல்ல. அக் கயவர்கள் ஷீலாவைச் சிறைவைத்துள்ள தனி இடத்தையும் கண்டு பிடித்துவிடுகிறது. இனி மேலே படியுங்கள்.



ஷீலாவைக்
காணோம்..
6
கதை
வாண்டுமாமா
சித்திரம்:
ரமணி..
ஷீலா டைகரின் நினைவாகவே இருந்த அதே நேரத்தில்...
டைகர், டைகர்...! என்
அருமை டைகர்! உனக்
குக் காயம் ஒன்றுமில்லையே.
அந்தப் பாவிகள்
உன்னை வெளியே
தள்ளிய போது
நான் எப்படித்
தவித்துப் —
போனேன்
தெரியுமா?
மகிழ்ச்சியால் தன்னை மறந்த டைக
ரோடு பேசிய ஷீலாவின் குரல் கடத்
தல் காரர்களைக் கவர்ந்து விடுகிறது.
அந்த நாய்
எப்படியோ தப்பி
வந்து விட்டதே.
அதை உயிரோடு
விட்டால் நம் உயி
ருக்கே ஆபத்து.
சுடு... தப்ப விடாதே. குறி
பார்த்துக் கொல்லு சனியனை.
நீ ஒரு முட்டையன். குறி
பார்த்துச் சுடத் தெரியா
தவனுக்குத் துப்பாக்கி
எதற்கு? காருக்குள்ளேயே
அதைக் குளோஸ் பண்ணி
இருக்கணும். முட்டாள்.
இப்போதும் தப்ப விட்டு
விட்டாய்.
துப்பாக்கிக் குண்டுக்கு 'டோக்கா' கொடுத்
துத் தப்பிய டைகர் நள்ளிரவுக்கு மேல்
அந்தக் கொடியவர்களின் இருப்பிடத்
துக்கு வருகிறது. ஷீலாவை மறக்க
முடியுமா அதனால்......?



மெள்ளப் பதுங்கிப் பதுங்கி உள்ளே நுழைந்த டைகர்...
ரொம்ப நேரமாகிறதப்பா. தூக்கம் கண்ணைச் சொருகுது. ஆட்டத்தை முடிப்போம்.
அதே சமயம் டைகர் அவர்கள் மீது பாய...
ஐயோ—அதே நாய்...
வெறி கொண்ட உறுமலும் பற்களும்.. ஐயையோ!
சிம்னி விளக்குக் கீழே உருள, அதிலிருந்து பெருகிய மண் எண்ணெய் பெருந்தீயாகப் பரவி விடுகிறது..
சீக்கிரம். தீ பரவுமுன் அணைக்கப் பார். தண்ணீர் கொண்டு வா அக்தி...
என் அருமை டைகர். அந்தப் பாவிகளிடமிருந்து எப்படியும் தப்பி விட வேண்டும். நம்மைத் துரத்தி வருவார்கள் துரோகிகள். சீக்கிரம் ஓடி வா..
கையில் துப்பாக்கியும் லாந்தருமாக நள்ளிரவில் அந்தக் கொடியவர்கள் ஷீலாவையும் டைகரையும் தேடி வருகிறார்கள்....
கடவுளே.. எங்களை அந்தக் கயவர்களின் கண்களில் தெரியும்படி செய்து விடாதே. என் டைகரை இரக்கமின்றிச் சுட்டுத் தள்ளி விடுவார்கள். ராம்..ராம்..ராம்.

தொடரும்..





பிறந்தது எப்படி?

தபால் இலாகா

லென்ஸ்

கொட்டும் மழையா, கொதிக்கும் வெய்யிலா, பண்டிகையா, பருவமா? எதையும் லட்சியம் செய்யாமல், பொது மக்களின் நன்மைக்காக உழைக்கும் ஒரு பணியாளர் இருக்கிறார். அவர்தான் தபால்காரர். செய்திகளை உலகின் எந்தப் பாகத்தி லிருந்தாலும் அறிவதற்கு வேறு பல சாதனங்கள் இருந்தாலும் தனி மனிதன் தன் உறவினர்களிடமிருந்து க்ஷேம லாபங்களை அறிவதற்கு உதவுவது தபால் முறைதானே? இந்தத் தபால் முறை எப்படி யாரால் ஏற்பட்டது தெரியுமா?

ஆதி மனிதன் கானக வாசியாக, குகைவாசியாக இருந்தபோது குன்றின் உச்சியில் தீமூட்டியும், நெருப்புப் பந்தங்களைக் கையில் ஏந்திப் பலவிதமாக அசைத்தும் செய்திகளைச் சூசகமாக வெகு தூரத்தில் உள்ளவர்களுக்கு அறிவித்தான். செவ்விந்தியர்கள் தீமூட்டி அதன் மீது தோல் துணியை மூடிக் குமைந்து சேரும் புகையை ஒருவிதலாகவமான முறையில் பல வடிவங்களில் வானத்தில் எழச் செய்தும் செய்தி அறிவித்து வந்தனர். தீப்பந்தங்களைப் பல கோணங்களில் அசைத்து 'சிக்னல்' தரும் முறை இன்றும் கூடப் பல இடங்களில் புழக்கத்தில் உள்ளது.

மனிதனிடத்திலே எண்ணும் எழுத்தும் மொழியும் தோன்றிய பிறகு செய்திகளை வாய் மொழியாகவே ஒரு மனிதனிடம் கூறி அனுப்பினான். இது









தூது முறை. அரசாங்கங்களில் தூதுவர்கள் இருந்தார்கள். இவர்கள் சாதுரியமாகப் பேச வல்லவர்கள். வேகமாகப் பிரயாணம் செய்யக்கூடியவர்கள். இந்தத் தூதுவர்களிடையேயும் சில மாறுதல்கள் ஏற்பட்டன. செய்திகளைக் காதால்கேட்டு வாயால் திருப்பிச் சொல்லும் முறை மாறி, அறிவிக்க வேண்டிய செய்திகளை ஓலைச் சுவடிகளிலும் பட்டுத் துணி, தோல், பாபிரஸ், மரக்கட்டை, களிமண் பலகை ஆகியவைகளிலும் எழுதித் தூதுவர் மூலம் அனுப்பி வந்தனர். எப்படியானாலும் தூதுவர்கள் மழை, வெய்யில், புயல், பனி பாராமல் செய்திகளைத் தாங்கிப் பிரயாணம் செய்துதான் ஆக வேண்டும். புறாக்களையும் இம்மாதிரியான காரியங்களுக்குப் பயன்படுத்தினான் மனிதன். தபால் புறாக்கள் இன்னும்கூடச் சில பகுதிகளில் செயல்படுகின்றன.



செய்திகளைத் தாங்கிச் செல்லும் தூதுவர்கள் விரைவாகச் செயல்பட நல்ல பாதைகளையும் சாலைகளையும் அமைத்தார்கள் ரோமானியர்கள். எந்த விஷயத்திலும் முன் நிற்கும் சீனாவில் கி. பி. 1200ம் ஆண்டிலேயே சுமார் 10,000 தபால் சாவடிகள் இருந்தனவாம். செய்திகளைத் தாங்கிப் போகும் தூதுவர்கள் குதிரைகளின் மீது பயணம் செய்தனர்.

1400ல் நான்காம் எட்வர்ட் மன்னர்தான் இங்கிலாந்தில் தபால் நிலையங்களை ஏற்படுத்திப் போஸ்ட்மாஸ்டர்களையும் நியமித்தார். இது அரசாங்கச் செய்திகளை மட்டுமே தாங்கிச் செல்லும் ஸ்தாபனமாகத்தான் இருந்தது. 1516ல்தான் பொதுஜனங்கள் தங்களுக்குள் செய்திகளைப் பரிமாறிக் கொள்ள வசதி ஏற்

புகைப்படங்கள் : கே. விஸ்வநாத்

பட்டது. முதன் முதலில் பெர்லினுக்கும் வியன்னாவுக்கு மிடையே பொதுத் தபால் முறை ஏற்பட்டது.

இரண்டாம் சார்லஸ் மன்னர் 1683ம் ஆண்டில் இலண்டன் நகரில் ஒரு பென்னி செலவில் செய்திகளைப் பரிமாறிக் கொள்ள வகை செய்தார். அப்போது தபால் தலைகள் கிடையாது. தபால்களைத் தபால் ஆபீசில் கொடுத்து உரிய கட்டணம் செலுத்தினால் அதன் மீது 'Paid' என்று அதிகாரி எழுதிவிடுவார். அவ்வளவுதான்.

முதன் முதலில் பின்னால் பசை தடவிய தபால் தலைகள் ஏற்பட்டது 1840ம் ஆண்டு மே மாதம் 6ந் தேதிதான். இதை அறிமுகப்படுத்தியவர் **ரோலண்ட் ஹில்** என்ற பள்ளி ஆசிரியர்.

தபால் தலை புழக்கத்துக்கு வருமுன் தபால் கூலி இஷ்டத்துக்கு வசூலிக்கப் பட்டது. செய்திகள் அடங்கிய காகிதங்களின் எண்ணிக்கை, அது செல்ல வேண்டிய தூரம் இவைகளுக்கு ஏற்றபடி தபால் கூலி கூடியும் குறைந்தும் இருந்தது. சாதாரண மக்கள் தபால் அனுப்புவதில் சிரத்தை காட்டவில்லை. கட்டணம் செலுத்திக் கடிதங்களைக் கொடுத்தாலும் அவைகளைத் தபால்காரர்கள் கொண்டு செல்ல வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. விதிமுறைகள் வகுக்கப்படாத காலம் அது. விலாசதார் வாங்காத கடிதங்களும் ஏராளமாகக் குவியலாயின. பாராளுமன்ற அங்கத்தினர்களும் அவர்களுடைய உறவினர்களும் கூடக் கட்டணமின்றித் தபால் அனுப்பலாம். தபால் கட்டணங்களை வசூலிக்க நிறையப் பணியாளர்களை நியமிக்க வேண்டியிருந்தது. ஏராளமான கடிதங்கள் கட்டணம் செலுத்தப் படாமல் கிடந்தன. ஆகவே தபால் நிலையங்கள் நஷ்டத்திலியங்கின.

ரோலண்ட் ஹில் என்பவர் தபால் நிலையங்களால் மக்களுக்குக் கிடைக்கும் மகத்தான நன்மையை உணர்ந்தார். அதை எப்படிச் சீர்செய்ய வேண்டும் என்பதைப் பற்றிச் சிந்தித்தார். அவர் தபால் இலாகாவின் ஊழியர் இல்லை. பள்ளிக்கூட வாத்தியார். தபால் போக்குவரத்து பற்றி விசாரணை செய்தார். அதன் முடிவு தபால்களை அதன் தூரத்தைப் பற்றிக் கணக்கிடாமல் அதன் நிறைக்கு ஏற்பக் கட்டணம் வசூலித்தால் போதும் என்று அறிவித்தார். கட்டணம் குறைவாக இருக்குமானால் ஏராளமான மக்கள் தபால் துறையின் சேவையைப் பயன்படுத்திக் கொள்வார்கள். தபால் கட்டணங்கள் முதலிலேயே செலுத்தப்பட்டால் விநியோக முறை வேகமாகவும் மலிவானதாகவும் இருக்கும் என்று நம்பினார் ஹில். இவருடைய கருத்தைத் தபால் நிலைய அதிகாரிகள் எதிர்த்தார்கள். ஆனால் பாராளுமன்ற அங்கத்தினர்கள் ரோலண்ட் ஹில்லின் யோசனையில் உள்ள மதிப்பை உணர்ந்தார்கள். ஆகவே ஒரே சீரானதும் மலிவானதுமான தபால் கட்டண முறையைச் சட்டமாக்கினார்கள். தாங்கள் கட்டணமின்றித் தபால் அனுப்பி வந்த சலுகையையும் மறுத்து நிறுத்தி விட்டார்கள்.

இதனால் போஸ்டாபீசில் ஏராளமான கடிதங்கள் வெள்ளமென வந்து குவியலாயின. வீட்டிலிருந்து வெளியூர் போகும் போது உறவினர்களுடனும் நண்பர்களுடனும் தொடர்பு கொள்ளத் தபால் முறை வசதியாக இருந்தது. தொழில் நிலையங்களில் தபால் முறையால் வியாபாரம் பெருகியது. புகை வண்டிகள் வருமுன் 'ஸ்டேஜ்கோச்' என்ற குதிரை வண்டிகளில் தபால் பட்டுவாடா நடந்தது. நம் நாட்டில் 'ரன்னர்' என்று தபால்களைச் சுமந்து ஊருக்கு ஊர் ஓடுபவர் ஒரு காலத்தில் இருந்தார்கள். ரயில் வண்டி வந்ததும் தபாலின் வேகமும் பணியும் சிறப்படைந்தன. முதன் முதலில் வெளியிடப்பட்டவை ஒரு பென்னி மதிப்புள்ள கறுப்பு நிறத் தபால் தலையும் இரண்டு பென்னி மதிப்புள்ள நீல நிறத் தபால் தலையும்தான். அவை

அஞ்சல் அட்டை



அஞ்சல் அட்டை வாங்குவேன்
அழகாய்க் கடிதம் எழுதுவேன்
அம்மா, அப்பா நலம்கேட்டு
அரிய ஆசை என்றிடுவேன்
தேர்வைப்பற்றி எழுதுவேன்
தேர்வெண்பற்றித் தெரிவிப்பேன்
ஆர்வத்தோடு 'பாஸ் பெயிலை'
அங்கே நானும் அறிவிப்பேன்

- வடகரை எம். சேஷன்

களில் விக்டோரியா ராணியின் உருவத் தலை அச்சிடப்பட் டிருந்தது. தபால் கார்டுகள் புழக்கத்துக்கு வந்தது 1873ம் ஆண்டில்தான். உலக நாடுகளுக்கிடையே தபால் போக்குவரத்து தொடங்கியது 1874ல்.

இந்தியாவில் முதன் முதலில் தபால் துறையை ஏற்படுத்தியவர் ராபர்ட் கிளைவ், 1766ல். இது முதலில் கிழக்கிந்தியக் கம்பெனியின் கடிதங்களை விநியோகிக்கும் இலாகாவாகவே இருந்தது. 1837ல்தான் பொதுமக்களின் உபயோகத்துக்குத் தபால் நிலையங்கள் இங்கு இயங்கலாயின. இந்தியாவில் முதன் முதலில் சிந்து மாகாணத்தில் மட்டும் 1852ல் தபால் தலை வெளியிடப்பட்டது. இந்தியா முழுவதற்குமான தபால் தலை 1854ல்தான் வெளியாகியது.

இன்று நம் நாட்டில் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட தபால் நிலையங்கள் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு நாளும் ஒரு கோடியே எண்பது லட்சத்துக்கும் மேற்பட்ட அஞ்சல் பொருட்களையும் ஒரு லட்சத்து அறுபதினாயிரம் தந்திகளையும் இந்திய அஞ்சல் தந்தி இலாகா அனுப்பிவைக்கிறது. நம் நாட்டிலுள்ள மொத்த அஞ்சல் நிலையங்களில் 90 சதவிகிதம் கிராமப் பகுதிகளில் உள்ளன. நம் நாடு விடுதலை அடைந்த போது 150 சதுர கிலோ மீட்டருக்கு ஓர் அஞ்சல் நிலையம் வீதமிருந்தது. இன்றோ 30 சதுர கிலோ மீட்டருக்கு ஒரு அஞ்சல் நிலையமாக அபிவிருத்தி அடைந்துள்ளது. உலகத் தபால் இலாகாவில் ஏற்பட்டுள்ள எல்லா நாகரிக வசதிகளையும் அநேகமாக நம் நாட்டிலும் நாம் அனுபவித்து வருகிறோம். கடிதங்களைத் தவிர மணியார்டர், ரிஜிஸ்தர், இன்ஷியூரன்ஸ் போன்ற பல்வேறு பிரிவிலும் தபால் இலாகா பணிபுரிகிறது. சேமிப்புத் துறையில் பாங்காகவும் செயல்படுகிறது. தபால் தலை சேகரிப்பவர்களுக்கு விருந்தாக அடிக்கடி அழகழகான தபால் தலைகளை வெளியிட்டு வருகிறது நம் அரசாங்கம்.

1966ம் ஆண்டிலிருந்து ஒரு புதிய சலுகையை நம் தபால் துறை செயல்படுத்துகிறது. கண் இழந்தோருக்கு அனுப்பப்படும் கடிதங்களுக்கோ, அவர்களே எழுதும் கடிதங்களுக்கோ தபால் கட்டணம் வசூலிக்கப்படுவதில்லை.

சமீபத்தில் 'பின்கோட்' (போஸ்டல் இண்டக்ஸ் நம்பர்) முறையை அறிமுகப்படுத்தி யிருக்கிறார்கள். இம்முறையினால் தபால் இலாகா விரைவாகவும் தவறின்றியும் செயல்பட முடியும்.



புகைப்படம்: எஸ். சுந்தரராஜன்

புறாத் தபால்

என்னைத் தெரியுமில்லையா உங்களுக்கு? செய்திகளை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குக் கொண்டு செல்லும் பணியில் நானும் பங்கு கொண்டிருந்த காலம் உண்டு. மலைப் பிரதேசங்களிலும், மனிதர்களால் போக முடியாத இடங்களுக்கும், ரகசியச் செய்திகளையும் நாங்கள்தான் எடுத்துச் சென்று கொண்டிருந்தோம். 'புறாத் தபால்' இன்றும்கூடச் சில நாடுகளில் புழக்கத்திலுள்ளது. எங்கள் கால்களோடு இணைக்கப்பட்ட உலோகக் குழாயினுள் செய்திகளை அடைத்து எங்களை வானிலே பறக்கவிடுவார்கள். இதற்காகவே பழக்கப்பட்டுள்ள நாங்கள் எங்கள் பணியைக் கன கச்சிதமாகச் செய்து முடிப்போம். விரோதிகளால் எங்களுக்கும் ஆபத்துண்டு. செய்திப் புறா என்று அறிந்து எதிராளிகள் எங்களைச் சுட்டுக் காயப்படுத்தி எங்களிடமுள்ள செய்தியை அபகரித்துக் கொள்ளுவார்கள். ராஜாளிகள் போன்ற சில பறவைகளாலும் எங்களுக்கு ஆபத்து வருவதுண்டு. இப்படி எதிர்பாராத விபத்துக்கள் ஏற்பட்டாலன்றி எங்கள் கடமையிலிருந்து நாங்கள் தவறுவதே இல்லை. ஜப்பானிலுள்ள ஆஸாகி என்ற பத்திரிகை, நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து செய்திகளைக் கொண்டுவர ஒரு புறாப் பண்ணையையே வைத்திருந்தது. அதில் 216 புறாக்கள் இருந்தன. செய்திப்பட நெகடிவ்களைக்கூட எங்கள் காலில் கட்டி அனுப்பிவிடுவார்கள். எங்கள் புறாத் தபால் புராணம் கூறினால் இங்கு இடம் போதாது.








தபால் தலைகள் பற்றி



உங்களில் பலர் தபால்தலைகள் சேகரிப்பதைத் தமது பொழுதுபோக்காகக் கொண்டிருக்கலாம். தபால் தலைகளிடம் உங்களுக்குள்ள ஈடுபாட்டைப் பரிசோதிக்கக் கீழே சில வினாக்களைக் கொடுத்திருக்கிறோம். இவைகளுக்குச் சரியான பதில் கூற முடியுமா உங்களால்? முடியாதவர்களுக்கு அருகிலேயே விடைகளும் உள்ளன:

1. தபால் தலைகளுக்குத் 'தபால்தலை' என்று ஏன் பெயர் ஏற்பட்டது? 2. இந்தியாவில் முதன் முதல் அச்சிட்ட தபால் தலை எது? 3. நமது தீபாவளிப் பண்டிகையைத் தபால் தலையில் வெளியிட்ட நாடு எது? 4. ஒரே ஒரு நாட்டின் தபால் தலையில் அந்நாட்டின் பெயரும், விளக்கமும் தமிழ் மொழியில் எழுதப் பட்டிருக்கும். அது எந்த நாடு?

5. தாங்கள் உயிருடன் உள்ளபோதே தங்களின் உருவப் படத்தைத் தபால் தலைகளில் காணும் பேறு பெற்ற நான்கு மேதைகள் யார்?

6. பழம்பெரும் இலக்கிய மேதையின் படம் கிடைக்காததால், அவரது இலக்கியப் படைப்புக்களிலிருந்து நம் அரசு இரண்டு காட்சிகளைத் தபால் தலையில் வெளியிட்டது. அந்த மாமேதை யார்?



7. நமது தேசியக் கொடி அதன் மூன்று நிறங்களுடன் பொறிக்கப்பட்டு வெளி வந்த தபால் தலை எது?

8. தபால் தலைகளில் இடம் பெற்ற இரண்டு தமிழ்க் கவிகள் யாவர்?

9. தபால் தலையில் தன் பெயரை வெளியிடாத நாடு எது?

10. தபால் தலை விற்பனையில் அதிக வருவாயைத் தந்த தபால் தலை எது?

11. தபால் தலை வடிவத்தை வட்டவடிவமாக வெளியிட்ட நாடு எது?

12. மணம் வீசும் தபால் தலையை வெளியிட்ட நாடு எது?

13. சமீபத்தில் ஒரு தபால்தலை அமெரிக்காவில் ஏலம் விடப்பட்டு ஏழுலட்சம் ரூபாய்க்குப் போனது. அது எந்த நாட்டுத் தபால் தலை?

14. தபால் தலைகளைச் சேர்த்த அமெரிக்க ஜனாதிபதி யார்?

15. கீழ்க்கண்ட நாடுகள் தங்கள் நாட்டுத் தபால் தலைகளில் தங்கள் நாட்டுப் பெயரை வேறு விதமாக வெளியிடுகின்றன. அப்பெயர்கள் யாவை?

(1) சோவியத் யூனியன்; (2) ஜப்பான்; (3) சுவீடன்; (4) நார்வே; (5) சுவிட்ஜர்லாந்து; (6) போலந்து; (7) ஆஸ்திரியா; (8) ஹங்கேரி.

—மு. தனசேகரன்.

தருமாருதிருக்

1. முதன் முதலில் 'தபால் ...
புழக்கத்தில் வந்தபோது அப்போ...
பிரிட்டனை அரசாட்சி செய்து ...
விக்டோரியா மகாராணியாரின் உரு...
படத்தைத் தபாலின்மீது ஒட்டுவதற்...
அச்சிட்டார்கள். இதுபோல மற்ற தே...
களிலும் அந்நாட்டுத் தலைவர்க...
படங்கள் தபால் தலைகளாக வந்தது...
தபாலில் இடம் பெறும்—தலை என்ப...
சுருக்கமாக இப் பெயர் ஏற்பட்டது.

2. 1854-ஆம் ஆண்டு விக்டோ...
மகாராணியாரின் உருவப் படத்து...
வெளியிடப்பட்டது.

3. சிங்கப்பூர்.

4. இலங்கை (ஸ்ரீ லங்கா).

5. டாக்டர் போண்டோ ...
கார்வே, டாக்டர் விசுவேசுவரை...
டாக்டர் ராஜேந்திர பிரசாத், டா...
ராதாகிருஷ்ணன்.

6. மகாகவி காளிதாஸர்.

7. 15-8-1947ல் விடுதலை ...
வன்று வெளியிடப்பட்ட மூன்...
அணு தபால் தலை.

8. திருவள்ளுவர், பாரதியார்.

9. இங்கிலாந்து.

10. மனிதன் சந்திரனில் இறங்...
தற்கு அடையாளமாக வெளியிடப்...
அமெரிக்கத் தபால் தலை.

11. மலேஷியா.

12. தென் ஆப்பிரிக்கா.


13. பிரிட்டிஷ் கயானா.

14. ரூஸ்வெல்ட்

15. 1. ஸி. ஸி. ஸி. பி.; 2. நிப்பா...
3. ஸ்விரேஜ்; 4. நார்ஜ்! 5. எல்விட்டி...
6. போல்ஸ்கா; 7. ஆஸ்டர்—ரீச்; 8. மகா...




சிரிக்கச் சிரிக்க..!



''அவங்க வீட்டில் பல சாமான்களுக்கு கண்ணு, மூக்கு, காது, வாய், பல்லு, கால், இவையெல்லாம் இல்லே''


''சாமான்களுக்குக் காது மூக்கா?''

''தேங்காய்க்குக் கண் இல்லே; பால் கெண்டிக்கு மூக்கில்லே; இருப்பச் சட்டிக்குக் காதுகள் இல்லே; நாற்காலிக்குக் கால் இல்லே; சீப்பில் பல்லே இல்லே!''



''மணியைப் பார்த்துண்டே பாடம் சொல்லித் தருகிறீரோமே? வேலைக்கு வந்தால் மணியையே பார்த்திண்டிருக்கலாமா?''

''என் மாணவன் மணியையேன்று நான் கவனிக்கறேன். 'யாரோ தவறுதலாகச் சொல்லி இருக்கா!''



சாமா



''நான் பள்ளிக்கூடம் போகும்போது மிட்டாய் கடை எதிரே தடுக்கி விழுந்தேன். கடைக்காரன் பரிதாபப்பட்டு மிட்டாய் கொடுத்தாம்மா... நீ இப்ப ஐஸ்கிரீம் வாங்கித் தாம்மா...''

''என்னிடம் காசில்லே, ஐஸ்கிரீம் கடைக்கெதிரே தடுக்கி விழு, போ!''



''எங்க மாமா குதிரை மேல் சவாரி போறப்ப அவரைப் புலியும் சிங்கமும் துரத்திக் கொண்டே வந்தனவாம்.''

''போடா, அளக்காதே! உங்க மாமா ரெங்க ராட்டினக் குதிரையிலே சவாரி செய்திருப்பார்!''

நாட்டியம் தெரியுமா?

சா. கோ. குணசேகரன்

மொகலாயப் பேரரசர் அக்பர் நம்பிக்கையுள்ள ஒரு பொக்கிஷதாரரை தம் அரண்மனையில் நியமிக்க எண்ணினார். உடனே அவர் தம் எண்ணத்தை அருகிலிருந்த பீர்பாலிடம் சொன்னார். அதற்குப் பீர்பால் ''நம்பிக்கையுள்ள ஒரு பொக்கிஷதாரரை நியமிக்க எனக்கு வழி தெரியும். அந்த வேலைக்கு வர விரும்புபவர் நாட்டியம் ஆடத் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும். அவர்களுள் யார் நன்றாக நாட்டியம் ஆடுகிறார்களோ அவர்களுக்கே அந்த உத்தியோகம் கொடுக்க வேண்டும். தங்களுக்கு எதிரில் நன்றாக நாட்டியம் ஆடுபவரே நம் நம்பிக்கையுள்ள பொக்கிஷதாரர்'' என்றார்.

அக்பர் இதைக் கேட்டதும் கடகடவென்று சிரித்தார். பின், ''பீர்பால்! நீங்கள் சொல்வது வேடிக்கையாக இருக்கிறது. நாட்டியத்துக்கும் பொக்கிஷதாரர் வேலைக்கும் என்ன சம்பந்தம்? நன்றாக நாட்டியம் ஆடுபவர் கெட்டிக்காரப் பொக்கிஷதாரர் என்று எப்படிச் சொல்ல முடியும்?'' என்று கேட்டார் அக்பர். அதற்குப் புத்திசாலியான பீர்பால், '' அரசே! நன்றாக நடனம் ஆடுபவர்தான் கெட்டிக்காரப் பொக்கிஷதாரர் என்று என்னால் உறுதியாகச் சொல்ல முடியாது. ஆனால் அவர் மிகவும் நம்பிக்கையுள்ளவராக இருப்பார் என்று மட்டும் நிச்சயமாகச் சொல்வேன்'' என்றார்.

பிறகு, ''அரண்மனைப் பொக்கிஷதாரர் வேலைக்கு ஒருவர் வேண்டும். அவருக்கு நன்றாய் நாட்டியம் ஆடத் தெரிய வேண்டும். அப்படித் தெரிந்தவர்கள் எல்லோரும் நாளை மாலை அரண்மனை தர்பாரில் சக்கரவர்த்திக்கு எதிரில் நாட்டியம் ஆடிக் காட்டத் தயாராக வர வேண்டும்'' என்று தண்டோராப் போட்டு ஊர் முழுவதும் பரவச் செய்தார்கள். மறுநாள் மாலை பொக்கிஷதாரர் வேலைக்காக நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் அரண்மனைக்கு வந்தார்கள். இப்படி வருபவர்கள் எல்லாம் அரசருடைய தர்பார் மண்டபத்துக்குப் பக்கத்தில் இருந்த ஓர் அறையில் உட்கார்ந்திருக்க வேண்டும் என்று பீர்பால் ஏற்பாடு செய்திருந்தார். அந்த அறை மிகவும் இருட்டாக இருந்தது. நாட்டியம் ஆடுபவர்கள் எல்லோரும் ஒவ்வொருவராக அந்த அறையிலிருந்து வெளியே வந்தார்கள். ஒவ்வொருவனும் தனக்குத் தெரிந்த நாட்டியங்களைத் தர்பார் மண்டபத்தில் மன்னர் அக்பருக்கு





முன்னால் ஆடிக் காண்பித்தனர். ஒருவனுடைய நாட்டியமாவது அரசருடைய மனத்துக்குப் பிடிக்கவில்லை. ''இதுவரையில் இவ்வளவு மோசமான நாட்டியத்தை நான் பார்த்ததில்லை. ஒருவன் வெட்கப்படுகிறமாதிரி தலையைக் குனிந்தபடி ஆடுகிறான். இன்னொருவன் இரண்டு கைகளையும் உடலோடு பசையினால் ஒட்டியதுபோல் வைத்துக் கொண்டு ஆடுகிறான். ஒருவன்கூட நன்றாக ஆடவில்லை!'' என்று அக்பர் ரகசியமாகப் பீர்பாலிடம் சொன்னார். வந்திருந்த நூற்றுக்கும் மேற்பட்ட ஆட்டக்காரர்களில் ஒரே ஒருவனுடைய நாட்டியம்தான் அக்பருக்குக் கொஞ்சம் பிடித்திருந்தது. நன்றாய்த் தெரிந்த ஆட்டக்காரன்போல் அவன் கொஞ்சம்கூடக் கூச்சமில்லாமல் நாட்டியம் ஆடினான். பீர்பால், ''மகாராஜா! இவன்தான் நமக்குப் பொக்கிஷதாரராக இருக்கத் தகுந்தவன்'' என்றார்.

அக்பர் அவனையே அரண்மனைப் பொக்கிஷதாரராக நியமித்தார். பிறகு பீர்பாலை நோக்கி, ''நாட்டியத்துக்கும் பொக்கிஷதாரர் வேலைக்கும் என்ன சம்பந்தம்? எனக்கு ஒன்றும் புரியவில்லையே!'' என்று தம் சந்தேகத்தைக் கேட்டார். உடனே பீர்பால், ''மகாராஜா!. நான் அதை உங்களுக்கு நிரூபித்துக் காட்டுகிறேன்'' என்று கூறி, பொக்கிஷதாரர் வேலைக்கு வந்திருந்த நூற்றுக்கும் மேற்பட்ட பேர்களை அழைத்து வந்து அக்பரின் முன்னிலையில் நிறுத்தி அவர்களைச் சோதனையிடச் செய்தார். அவர்கள் மடியிலிருந்து பொற்காசுகள் 'கலகல' வென்று விழுந்தன. ஆனால் பொக்கிஷதாரராக நியமிக்கப்பட்டவனிடமிருந்து மட்டும் ஒரு காசுகூட விழவில்லை.

உடனே பீர்பால், ''மஹாராஜாவே! பொக்கிஷதாரர் வேலைக்கும் நாட்டியத்துக்கும் உள்ள சம்பந்தம் இப்பொழுதாவது தெரிந்ததா? இவர்களுடைய நல்ல நடத்தையைப் பரிசோதிப்பதற்காக, இவர்கள் இங்கு நாட்டியம் ஆட வருவதற்கு முன்னால் நம்முடைய இரகசிய அறையில் கொஞ்ச நேரம் உட்கார்ந்திருக்கச் சொன்னேன். வேண்டுமென்றே அந்த அறையில் சிறிது வெளிச்சம் இருக்கும்படி செய்து, அறையின் ஒரு மூலையில் நிறையத் தங்க நாணயங்களைக் குவியலாகக் கொட்டி வைத்திருந்தேன். நாணயங்களைத் திருடியவர்களெல்லாம் நாட்டியம் சரியாக ஆடவில்லை. ஆடினால் கல்: கல் என்று சத்தம் கேட்குமல்லவா? பொக்கிஷதாரர் வேலைக்கு நாணயம்தானே முக்கியம்! அதனால்தான் நான் இந்த ஏற்பாட்டைச் செய்தேன்'' என்று கூறினார்.

அக்பர், பீர்பாலின் புத்திசாதுரியத்தையும் அவருடைய திறமையையும் கண்டு மகிழ்ந்து பீர்பாலுக்கு நிறையப் பொன்னும் மணியுமாக வாரி வாரி வழங்கினார்.

ராஜகுமாரியின் பரிசு

'ஜானு'

வெகு காலத்துக்கு முன்பு ஓர் ஆற்றின் கரையோரமாக ஒரு மீனவன் வசித்து வந்தான். அவன் பெயர் முத்து. மீன் பிடிப்பதுதான் அவனுடைய தொழில். இதனால் அவன் பணக்காரனாக ஆக முடியவில்லை. ஆனால் முத்துவுக்கு நல்ல குணம். பொய் சொல்ல மாட்டான். எதற்கும் ஆசைப்படமாட்டான். மற்றவர்களுக்குத் துன்பம் செய்ய மாட்டான். எல்லோரிடமும் அன்பாகப் பழகி வந்தான்.

அதே கிராமத்தில் வள்ளி என்ற பெண் இருந்தாள். அவளுடைய அப்பா பணக்காரர். முத்துவின் நல்ல குணங்கள் வள்ளிக்குப் பிடித்திருந்ததால் அவனையே திருமணம் செய்துகொள்ள ஆசைப்பட்டாள். அவள் அப்பா சும்மா இருப்பாரா? ''முத்து ஏழையாக இருக்கிறான். நாம் பணக்காரர்கள். அவன் மீன் பிடிப்பவன். அவனைப் போய்க் கல்யாணம் செய்து கொள்கிறேன் என்கிறாயே?'' என்று வள்ளியிடம் சொன்னார் அப்பா. பிறகு முத்துவின் தங்கமான குணத்தைப் பற்றி அறிந்து கொண்டதும், அவர், இருவருக்கும் திருமணம் செய்து வைத்தார்.

முத்து ஒருநாள் மீன் பிடிப்பதற்காகக் கிளம்பிக் கொண்டிருந்தான். கடற்கரையில் ஒரு கிழவி நின்றுகொண்டிருந்தாள். அவனைக் கூப்பிட்டாள். அருகே போன முத்து, ''உங்களுக்கு என்ன வேண்டும், அம்மா?'' என்று கேட்டான். ''தம்பி! நான் அக்கரைக்குப் போக வேண்டும். நான் வயதானவள். என்னால் எப்படிப் போக முடியும்? தயவு செய்து நீதான் என்னை அக்கரைக்குக் கொண்டு போய் விடவேண்டும். உனக்குக் கோடிப் புண்ணியம் உண்டு'' என்று சொன்னாள் கிழவி.

முத்துவுக்குத் தயக்கமாக இருந்தது.

''அம்மா! உங்களுக்கு உதவி செய்யலாம். ஆனால் ரொம்ப நேரம் ஆகுமே? உங்களை அழைத்துக் கொண்டு போனால் நான் மீன் பிடிப்பது எப்படி? மீன் பிடித்தால்தானே நான் ஏதாவது சம்பாதிக்க முடியும்? நேரம் வீணாகிவிடுமே'' என்றான் முத்து.

''நீ ரொம்பவும் நல்ல பிள்ளையாக இருக்கிறாய் என்றுதான் உதவி கேட்டேன். பிறகு உன் விருப்பம். எப்படியாவது என்னை அக்கரைக்குக் கொண்டு போய்ச் சேர்த்தால் உனக்கு நன்மை ஏற்படும். கொஞ்சம் தயவு பண்ண மாட்டாயா?'' என்று கிழவி கெஞ்சிக் கேட்டாள்.

முத்துவின் மனம் இளகியது. தன் படகில் கிழவியை ஏற்றிக் கொண்டு போகச் சம்மதித்தான். கிழவி இரண்டு கோணி மூட்டைகளை வைத்திருந்தாள். ஒன்று சிறியது; இன்னொன்று பெரியது. இரண்டையும் படகில் ஏற்றியபிறகு கிழவியும் அமர்ந்து கொண்டாள்.

படகு புறப்பட்டது. சிரமப்பட்டு முத்து அக்கரைக்கு வந்து சேர்ந்தான். கிழவி படகை விட்டு இறங்கினாள். ஆனால் மூட்டைகளை எடுத்துக் கொள்ளவில்லை.

''தம்பி! நீ எனக்குப் பெரிய உதவி செய்திருக்கிறாய். அதற்




காக இந்த மூட்டைகளை உனக்கே கொடுத்து விடுகிறேன். எடுத்துக் கொள்'' என்று சொன்னாள் கிழவி.

''வேண்டாம் அம்மா! எனக்கு அப்படிப் பழக்கம் எதுவும் கிடையாது. படகிலிருந்து இறக்கி வைக்கிறேன். நீங்களே எடுத்துக் கொள்ளுங்கள்'' என்று சொன்னான் முத்து.

'' அப்படியெல்லாம் சொல்லக் கூடாது. உன் நல்ல குணத்துக்கு இதைச் சிறு பரிசாகக் கொடுக்கிறேன். மறுக்காதே'' என்று கூறிய கிழவி போய் விட்டாள்.

கிழவி சென்றதும் படகைத் திருப்பிக் கொண்டு வந்தான் முத்து. மூட்டைகள் இருந்ததால் படகு கனமாக இருப்பது போல் தோன்றியது. படகை ஓட்டச் சிரமமாக இருந்தது. பெரிய மூட்டையை அப்புறப்படுத்தி விட்டால் பாரம் குறையும் என்று நினைத்தான். அந்த மூட்டையில் என்ன இருக்கிறது என்று பார்ப்பதற்காகப் பிரித்தான். அதில் ஏதோ மாவு வைக்கப்பட்டிருந்தது. 'இவ்வளவு மாவு நமக்கு எதற்கு?' என்று நினைத்து அந்த மூட்டையை



ஆற்றில் தள்ளி விட்டான். படகை இப்பொழுது அவனால் சுலபமாக ஓட்ட முடிந்தது.

முத்து கரைக்கு வந்து சேர்ந்தான். சிறிய மூட்டையை மட்டும் தூக்கிக் கொண்டு வீட்டுக்கு வந்து சேர்ந்தான்.

மீன் பிடிக்காமல் முத்து திரும்பியது வள்ளிக்கு ஏமாற்றத்தை அளித்தது. மீன் பிடிக்க ஏன் போகவில்லை என்பதை அவன் வள்ளியிடம் சொன்னான்.

''வள்ளி! இந்த மூடடையைப் பார். அந்தக் கிழவி எனக்கு அன்பளிப்பாகக் கொடுத்தாள். பிரித்துப் பார்'' என்று கொடுத்தான்.

வள்ளி மூட்டையைப் பிரித்து மாவை அள்ளியபோது கையில் ஏதோ தட்டுப்பட்டது. மாவை அப்புறப்படுத்திவிட்டுப் பார்த்தார்கள். என்ன ஆச்சரியம்! தங்கக் கட்டிகள் அதனுள் இருந்தன. முத்துவுக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. ஆனால் அடுத்த நிமிடமே அவனுக்கு வருத்தமாகப் போய் விட்டது.

''வள்ளி! நான் பெரிய தப்பு செய்து விட்டேன். பெரிய மூட்டையை ஆற்றில் தூக்கி எறிந்து விட்டேன். அந்த மூட்டையில் எவ்வளவு தங்கக் கட்டிகள் இருந்தனவோ!'' என்று கலங்கினான்.

''இதற்குப் போய் வருத்தப்படாதீர்கள். நமக்குக் கிடைத்திருக்கும் தங்கம் போதாதா? இன்னும் எதற்கு?'' என்றாள் வள்ளி.

''போதாது. இன்னும் வேண்டும். ஆற்றில் மூழ்கிய மூட்டையையும் எப்படியாவது தேடி எடுத்துவிட வேண்டும். அது பெரிய மூட்டை. நிரம்பத் தங்கக் கட்டிகள் இருக்கும். அது கிடைத்து விட்டால் நான் மீன் பிடிக்கும் தொழிலையே விட்டு விடுவேன். பிறகு நாம் தான் பெரிய பணக்காரர்கள்!'' என்று முத்து சொன்னான்.

வள்ளி அவனைத் தடுத்து விட்டாள். இருக்கும் செல்வத்தை வைத்துக் கொண்டு திருப்தி அடைய வேண்டும். அதிகமாக ஆசைப்பட்டால் அதிக நஷ்டமே ஏற்படும் என்று சொல்லி முத்துவைச் சமாதானப்படுத்தினாள்.

அன்றிரவு முத்துவுக்குத் தூக்கமே பிடிக்கவில்லை. பெரிய மூட்டையை ஆற்றில் தள்ளி விட்டோமே என்று நினைத்து அவன் வேதனைப்பட்டான். மனம் குழம்பியது. விடிந்ததும் ஆற்றுக்குப் போய் அந்த மூட்டையைத் தேட வேண்டும் என்று முடிவு செய்தான். சிறிது நேரத்தில் அவன் தூங்கிப் போய் விட்டான்.

அப்பொழுது பளிச்சென்று ஒரு மின்னல் மின்னியது. அழகிய ராஜகுமாரி ஒருத்தி வந்து நின்றாள். அவள் உடல் முழுதும் தங்கம் போல் ஜொலித்தது.

''முத்து! நீ உதவி செய்தாயே ஒரு கிழவிக்கு. அந்தக் கிழவி நான்தான். நான் உண்மையில் கிழவி அல்ல. ஒரு ராஜகுமாரி!''

''ராஜகுமாரியா?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டான் முத்து.

''ஆமாம். நான் ஏழைக் கிழவிபோல் வேஷம் போட்டுக் கொண்டு வந்தேன். உன்னுடைய நல்ல குணத்தைப் பற்றிக் கேள்விப்பட்டேன். சோதித்துப் பார்க்கலாம் என்றுதான் கிழவி வேஷத்தில் வந்தேன். ஏழை என்று தெரிந்தும் நீ உதவி புரிந்தாய். உன் நல்லெண்ணத்துக்காகத் தங்கக் கட்டிகளைக் கொடுத்தேன்'' என்றாள் ராஜகுமாரி.

''ராஜகுமாரி! அந்தப் பெரிய மூட்டையிலும் தங்கக் கட்டிகள் இருந்தனவா?'' என்று முத்து கேட்டான்.

''இல்லை முத்து. அது வெறும் மாவு மூட்டைதான். அதிகமாக உன்னிடம் தங்கக் கட்டிகள் இருந்தால் அதுவே உனக்குத் துன்பமாகி விடும். பிறகு பேராசைக்காரனாய் மாறிவிடுவாய். அதனால்தான் சிறிய மூட்டையில் மட்டும் தங்கத்தை வைத்தேன். நீ ஆசைக்காரனாக இல்லாததனால்தான் சிறிய மூட்டையோடு வீட்டுக்குப் போனாய். இதே போல் எப்பொழுதும் நல்லவனாக இருந்து வர வேண்டும். அதிக ஆசைப்பட்டால் ஆபத்துத்தான் ஏற்படும். எல்லோருடனும் அன்பாக நடந்து கொள்'' என்று சொல்லி விட்டு ராஜகுமாரி மறைந்து விட்டாள்.

முத்து திடுக்கிட்டுக் கண் விழித்துக் கொண்டான். கனவில் ராஜகுமாரி வந்ததைப் பிறகு தன் மனைவி வள்ளியிடம் சொன்னான்.


''வள்ளி! அந்தப் பெரிய மூட்டையில் தங்கம் இல்லை என்று ராஜகுமாரி சொன்னாள். இப்பொழுதுதான் எனக்கு நிம்மதி ஏற்பட்டது. நீமட்டும் தடுக்காமல் இருந்திருந்தால் நான் ஆற்றுக்குப் போயிருப்பேன். தங்கக் கட்டிகளைத் தேடும் ஆசையில் எனக்கு ஏதாவது ஆபத்துக்கூட ஏற்பட்டிருக்கலாம் அல்லவா?'' என்றான்.


''அதிக ஆசை அதிக நஷ்டம் என்பதைப் புரிந்து கொண்டீர்களா? இனிமேல் நாம் சந்தோஷமாக இருக்கலாம்'' என்று சொன்னாள் மனைவி.

அவர்கள் அந்த ராஜகுமாரியை மறக்கவே இல்லை!

[மலாய் கிராமக் கதையின் தழுவல்]




பலே பாலு
கற்பனை: வாண்டு
சித்திரம்: செல்லம்
ஏய், வாங்கடா இந்தப் பழைய விரிப்பைத் தோட்டத்துக்குக் கொண்டு போகலாம். இதில் ஒரு புது விளையாட்டு விளையாடலாம்.
இன்னும் இழுடா பாலு...
ஆ! உன் புது விளையாட்டு என்னன்னு இப்பப் புரிஞ்சுப் போச்சுடா. எட்டப் போய் நின்னு ஃபுட்பாலைக் கொண்டு ஷாட் அடிக்கணும். பந்து தாக்குகிற இடத்திலுள்ள எண்ணிக்கைதான் ஸ்கோர். அப்படித் தானே?
சபாஷ்டா பாலு. சரியான ஷாட். உனக்கு ஐந்து பாயிண்ட்.
என்ன விளையாட்டுடா இது பாலு?
இதுக்குக் கார்ப்பெட் பால்னு நான் பெயரிட்டிருக்கிறேன். உருவத்தின் மீது பந்து பட்டால் இழப்பு. வெளியில் பட்டால் கெலிப்பு. இதோ ஸ்கோர்போர்டு.


ஒதுங்கி நில்லுங்க..நான் ஒரு ஷாட் அடிக்கிறேன். எந்த எண்ணிக்கையிலே அடிக்கணும் சொல்லுங்க.
அப்பா, உங்க ஷாட்டிலே பந்து விரிப்பையே பொத்துக்கிண்டு வெளியே போயிட்டுது.
தயிரோ... தயிர்....!
எவண்டா அது, பந்தை அடிச்சு என் தயிர்ப் பானையை உடைச்சவன்?
5
-1
10
5
அப்பாவ், ஓடி வந்துடுங்க... சீக்கிரம்...
என் பானைப் போச்சு. தயிர் போச்சு. என் சட்டையும் பாழாச்சு. இதுக்கு எப்படி ஈடு செய்யுறதுன்னு எனக்குத் தெரியும்...
பாலு எங்கே போறான் தெரியுமா? அவனை நான் உடனே பார்த்தாகணும்...
குக்குகு... குகு...குகு... குர்...



தெரியுமா?

467. கீழே மூன்று வார்த்தைகளுக்கு மூன்று விளக்கங்கள் கொடுக்கப் பட்டுள்ளன. அவைகளில் ஒவ்வொன்றிலும் ஒன்று தான் பொருத்தமான விளக்கம். அது எது? A கோனியோ மீடர் (Goniometer) 1. மின்சாரத்தை அளவிடும் கருவி; 2. கோணங்களை அளவிடும் கருவி; 3. ஒரு வகைக் கடிகாரம்.
(B) இஸோபார் (Isobar) 1. இசையில் ஓர் அளவுகோல்; 2. வானிலை ஆராய்ச்சியில் ஒரு பதம்; 3. பனிப் பாறைகள் மிதந்து செல்லும் ஒருவகை அமைப்பு.
(C) ஆர்னிதாலஜிஸ்ட் (Ornithologist) என்பவர் ஆராய்வது 1. பறவைகளை; 2. வார்த்தைகளை; 3. மதங்களை.

468. ஸ்விஸ் நாட்டு நிர்வாகப் பிரிவுகளை எப்படி அழைக்கிறார்கள் தெரியுமா?

469. ஆங்கிலம் பேசத் தெரியாத பிரிட்டிஷ் மன்னர் யார்?

470. சுவர் விளையாட்டு (Wall Game) ஆடப்பட்டது எங்கே, எப்போது?

471. பெண் குள்ளநரிக்கு ஆங்கிலத்தில் என்ன பெயர்?

472. சூடான காற்று மேலே கிளம்பிப் போகுமா, கீழே படியுமா?

473. மெக்காலே பிரபு இங்கிலாந்தின் பிரதமராக இருந்தவர் — இது சரியா? தவறா?

474. டான் க்விஸோட் — என்ற பாத்திரப் படைப்பை உருவாக்கியவர் யார்?

475. மார்க் ட்வைனின் நிஜப் பெயர் என்ன? இவரது மிகப் பிரபலமான படைப்பு எது?

476. பைபிளில் முதலில் வருவது பழமொழிகளா? தோத்திரப் பாடல்களா?

477. கீழுள்ள வார்த்தைகளுக்கு மும் மூன்று விளக்கங்கள் கொடுக்கப் பட்டுள்ளன. அவைகளில் ஒன்று மட்டுமே சரி. எது?
(A) ஹௌடா — 1. வரவேற்பில் ஒரு முறை; 2. யானையின்மீது அமைக்கப்படும் ஆசனம்; 3. ஒரு வகை உணவு.
(B) லாமா (Llama) 1. திபேத்திய மதகுரு; 2. ஒரு வகைச் சிறிய ஆடு; 3. தென் அமெரிக்காவில் வாழும் மிருகம்.
(C) ஸெக்ஸ்டண்ட் — 1. புதைகுழி வெட்டுபவன்; 2. சூரியக் கடிகாரம்; 3. கப்பலைச் செலுத்தப் பயன்படும் ஒரு கருவி.

478. கனமான உறை பனிக் கட்டிகள் வட துருவத்தின் பூமியை மூடிக் கொண்டிருக்கின்றன. இது சரியா? தவறா?


479. தென் ஆப்பிரிக்காவின் ஒரு நகரம் வைரச் சுரங்கங்களுக்குப் புகழ் பெற்றது. அதன் பெயர் என்ன தெரியுமா?


480. 'பம்ப் பால்' என்ற பதம் எந்த ஒரு விளையாட்டில் பயன்படுத்தப் படுகிறது?

481. க்ரோக்கெட் (Croquet) என்பது ஒரு விளையாட்டு. இதில் பயன்படுத்தப்படும் பந்துகளின் வர்ணங்கள் என்னென்ன?

விடைகள்: 467. A கோணங்களை அளவிடும் கருவி. B வானிலை ஆராய்ச்சியில் ஒருபதம். C பறவைகளை. 468. காண்டன்ஸ் (Cantons). 469. முதலாம் ஜார்ஜ். 470. நவம்பர் 30ல் புனித ஆண்ட்ரூஸ் தினத்தன்று (Eton)ஈடன் கல்லூரியில் (இங்கிலாந்து). 471. விக்ஸன் (Vixon). 472. மேலே போகும். 473. தவறு. மெக்காலே பிரபு மிகச் சிறந்த சரித்திராசிரியர். பார்லிமெண்டின் அங்கத்தினராகப் பல காலம் இருந்திருக்கிறார். யுத்த இலாகாவின் காரியதரிசி பதவி வகித்தவர். இங்கிலாந்தின் சரித்திரத்தை விரிவான முறையில் எழுதிப் புகழ்பெற்றவர். 474. மிக்யூல் செர்வான்டிஸ். 475. சாமுவேல் க்ளெமென்ஸ். 'டாம் சாயர்' பிரபலமானது. 476. தோத்திரப்பாடல்கள். 477. A யானைமீது அமைக்கப்படும் ஆசனம். B தென் அமெரிக்காவில் வாழும் மிருகம். C கப்பலைச் செலுத்தப் பயன்படும் ஒரு கருவி. 478. தவறு. வட துருவத்தில் நிலமே கிடையாது. 479. கிம்பர்லி. 480. கிரிக்கெட்டில். 481. சிவப்பு, கறுப்பு, மஞ்சள், நீலம்.

தெரியுமே!





'கோகுல'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக ஆர். அனந்தநாராயணனால் அச்சிட்டு வெளியிடப்பட்டது. ● ஆசிரியர்: சதாசிவம்

சந்தா விவரம்: ஒரு வருடம் ரூ. 7-00 ● ஆறு மாதம் ரூ. 3-50 ● வெளிநாடுகள் ரூ. 18-00

நீங்கள் விற்பது எதுவானாலும் சரி, பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் அதை மேலும் நன்கு விற்பனை செய்ய உதவுகிறது.



பிலிப்ஸ் அதிக பட்சமான வாடிக்கையாளர்களின் கவனத்தை உங்கள் கடையின் பக்கம் திருப்புகிறது.



உங்கள் ஜெனரல் ஸ்டோரில் பொருள்களை அதிகக் கவர்ச்சியுடன் காட்சியில் வைக்க உதவுகிறது.



உங்கள் ரெஸ்டாரெண்டில் உள்ள சூழ் நிலையைப் பிரகாசமாக்க உதவுகிறது.

பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் 100 வாட் பல்பினைப் போல் இருமடங்கு ஒளி தருகிறது. இந்த ஒளி சிறந்ததும், பிரகாசமானதும், கூசாததுமானது, கண்களுக்குக் குளிர்ச்சி தருகிறது. இருந்தும், மின்சாரச் செலவு ஒரு 40 வாட் பல்புக்காகும் அளவேதான்.

இந்தக்கச்சிதமான பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் இணைப்பு ஒரு பிலிப்ஸ் 40 வாட் :ப்ளூரோஸெண்ட் பல்ப் கொண்டது. அது சிறந்த, அதிகப்பிரகாசமான ஒளியைத் தருகிறது. பிரபலமான பிலிப்ஸ் பாலியெஸ்டர் பலாஸ்ட், ஸ்டார்ட்டர், ஸ்டார்ட்டர் ஹோல்டர் மற்றும் ஸ்ப்ரிங்க் இணைந்த ரோடார் லாம்ப் ஹோல்டர் இவைகளைக் கொண்டது பிலிப்ஸ் ஸ்ட்ரிப் லைட். பொருத்துவதற்கு எளிதானது. உபயோகத்திற்கு சிக்கனமானது. மேலும் சிறந்த முறையில் விற்பனை செய்ய உதவுகிறது.

இன்றே பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் பொருத்துங்கள்—உங்கள் வீடு, கடை மற்றும் தொழிற்சாலையில்.



பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட்
மூலம் அரைப்பங்கு செலவில் இருபங்கு வெளிச்சம் பெறுங்கள்.

பிலிப்ஸ் PHILIPS

பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்

PHL-3539A

"'ஜாக்கிரதையாகக் கையாளவும்' என்று எழுதட்டுமா?"

"அவசியமில்லை. ஸதர்ன் ரோட்வேஸில்தானே அனுப்பப் போகிறோம்?"

பிரதி வருடமும் பல லட்சம் டன் எடையுள்ள பார்சல்களை ஸதர்ன் ரோட்வேஸ் சுமந்து சென்று சேர்க்கிறது. பார்சல்களை அது ஜாக்கிரதையாகக் கையாள்கிறது. ஒவ்வொருவரையும் தனி அக்கறையுடன் கவனித்து சேவை செய்கிறது. இதனாலெல்லாம்தான் அதனிடம் வாடிக்கையாளர்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. பார்சல்களை ஏற்றுவது, எடுத்துச் செல்வது, இறக்குவது அனைத்தையும் விசேஷப் பயிற்சி பெற்ற ஊழியர்களே செய்கிறார்கள்.

ஆகவே உங்கள் பார்சல்களை ஸதர்ன் ரோட்வேஸ் நல்லபடியாகவும் பத்திரமாகவும் கொண்டுபோய்ச் சேர்ப்பதில் வியப்பில்லை.

வாடிக்கையாளர்களிடை வளர்ந்து வரும் நல்லெண்ணமும் நம்பிக்கையும்தான் தென்னகம் பூராவையும் தன் பார்சல் ஸர்வீஸினால் ஸதர்ன் ரோட்வேஸ் அரவணைக்கத் துணை புரிந்துள்ளது. தங்கள் பண்டங்களை அனுப்புவதற்கு மேன் மேலும் அதிக மக்கள் ஸதர்ன் ரோட்வேஸைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

ஸதர்ன் ரோட்வேஸ் பிரைவேட் லிமிடெட்

டிவிஎஸ் தொகுப்பைச் சேர்ந்த நிறுவனங்களில் ஒன்று

மதுரை

